விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:– பதினான்கு




சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 13 | ஞாயிற்றுக்கிழமை (30.10.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 315

# தெற்கு மக்களின் இணைக்கப்பாட்டுடன் விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சு

## நாட்டு மக்களுக்காற்றிய உரையில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

**தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக முதலில் தென்பகுதி மக்களின் முழு இணக்கப்பாட்டையும் ஏற்படுத்தி அதற்கமைவாக விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போவதாக பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தேசிய தொலைக்காட்சி ஊடாக அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையினிலேயே இதனைத் தெரிவித்தார்.**

கடந்த காலங்களில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளில் சாதகமான அனுபவங்களை பயன்படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார். இதுவரை மேற்கொள்ளப்பட்ட இருதரப்பினரது பேச்சுக்கள் யுத்தநிறுத்தத்திற்கு சிறந்தாக அமைந்த போதிலும் சமாதான நடவடிக்கைகளுக்கு போதியதாக அது அமைய வில்லை.

நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டில் பல் குறைபாடுகள் இருக்கின்றன. எனவே அதனை நாம் தான் மீண்டும் தயாரிக்கவேண்டும். அதில் தெற்கு மக்களின் கருத்துக்களை ஏற்றே தயாரிப்பேன் என்றார்.

நாட்டில் சமாதானத்தினை ஏற்படுத்துவதற்காக நான் (14 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று தொடர் குண்டு வெடிப்புக்கள்

## 150 இற்கும் மேற்பட்டோர் பலி

(புதுடில்லி)

**இந்தியத் தலைநகர் புதுடில்லியில் மக்கள் நெரில் மிகுந்த நான்கு முக்கிய சந்தைகளில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 150 மேற்பட்டோர் பலியாகினர்.**

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களினையடுத்து டில்லி முழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு வழுங்கப்பட்டது. டில்லி புகையிரதநிலையத்துக்கு அண்மையிலுள்ள வாகர்கஞ்சில் இந்திய நேரப்படி மாலை 5.30 மணிக்கு முதலாவது குண்டு வெடித்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றிலிருந்து வெடித்த சக்தி வாய்ந்த குண்டினால் பல கடைகள் தரைமட்டமானது. இதில் 20ற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். இதனைத் தொடர்ந்து சரோசினிப்பகுதியில் உள்ள சந்தைப் பகுதியில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததால் கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன.

இதில் 50 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். மூன்றாவது குண்டு கோவிந்த குரிசந்தைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த டில்லி போக்குவரத்துக்கழக பஸ்ஸில் வெடித்தது. நான்காவது குண்டு கோல் மாக்கற் பகுதியில் வெடித்தது.

இத்தொடர் குண்டு வெடிப்புக்களினை யடுத்து சந்தைத் தொகுதிகளுக்கு பொலிஸார் சீல் வைத்தனர். போக்குவரத்துக்களும் உடனடியாக நிறுத்தப்பட்டன. தீபாவளி சனநெரிசல் உள்ளபோது இக்குண்டுகள் வெடித்துள்ளதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவில் உள்ள விமான நிலையங்கள் புகையிரதநிலையம் என்பவற்றுக்கு பலத்த பாதுகாப்பு வழுங்கப்பட்டுள்ளது. (ச–8)

# புத்தூர்ச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.குடாவில் இன்று துக்கதினம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் நேற்று முன்தினம் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டித்து இன்று யாழ்.குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் விடுத்துள்ளது. யாழ். குடாநாடு முழுவதும் வர்த்தக நிலையங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளை பறக்க விட்டும் சோககீதங்களை இசைத்தும் துக்கதினத்தை அனுஷ்டிக்குமாறும் – இதேவேளை புத்தூர் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சகல வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு அகிம்சை வழியிலும் அமைதி வழியிலும் வர்த்தக சமூகத்தின் அனுதாபத்தை தெரிவிக்குமாறு யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது.

புத்தூர்பகுதியில் யுவதி ஒருவர் இராணுவச்சிப்பாய் ஒருவரால் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்ட சம்பவத்தைக்கண்டித்து அப்பகுதி மக்களால் இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன், வயோதிபர்கள் உட்பட பதினைந்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தது தெரிந்ததே. (ச–8,4,43)

## றக்கா வீதிக்காவலரண் மீது நேற்று கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.றக்கா வீதியில் ஜோன்பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள இராணுக்காவலரண்மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று பிற்பகல் 2மணியளவில் இது இடம்பெற்றுள்ளது. வீசப்பட்ட குண்டு காவலரணுக்கு முன்னால் உள்ள பதுங்கு குழியில் வீழ்ந்து வெடித்தமையால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இத்தாக்குதலினை நடத்தியதாக 512 வதுபடையணி யுத்தநிறுத்தக் கண்காணிப்புகுழுவிடம் முறையிட்டுள்ளது. (ச–4,43)

## பண்ணைப்பாலம் ஊடான போக்குவரத்து வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

பண்ணைப்பாலம் போக்குவரத்திற்காக நேற்று மாலை திறந்து விடப்பட்டது. திருத்த வேலைகளுக்காக கடந்த 15 ஆம் திகதி முதல் அப்பாலம் ஊடான போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டு குறிப்பிட்ட தூரம் வரை கடல் மார்க்கமாக போக்குவரத்து இடம்பெற்று வந்தது. தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் ஓரேயொரு தரை வழிப்பாதை இதுவென்பதால் துரிதகதியில் பாலம் திருத்தப்பட்டு போக்குவரத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அக்கரைப்பற்றில் நேற்று தொழிலாளி சுட்டுக்கொலை

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் அரிசி ஆலை தொழிலாளி ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் அக்குறானையைச் சேர்ந்த நவரட்ண ஹெட்டிகெதர முதியன்சலாகே அபயரத்ன (வயது 38) என அடையாளம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை அதிகரிக்கவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெய், பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலை அதிகரித்து வருவதனாலேயே இம்முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டீசலின் விலையை 9 ரூபாவினாலும் பெற்றோலின் விலையை 2 ரூபாவினாலும் மண்ணெண் ( 14 ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறைவன் எமக்குத் தந்துள்ள அறிவை சமூக நலனுக்காக பயன்படுத்துவோம்

பரமபிதாகாட்டிய பாதை

எம்மிலே பலர் சில காரியங்களைச் செய்வதற்கு நல்ல நாள், நல்ல நேரம் என்று பார்க்கின்றோம்.சில நாட்களில் நோன்பு ஒறுத்தல்,உபவாசம் இருக்கின்



றோம்.கடவுளின் அனுக்கிரகத்தை, ஆசீர்வாதத்தை அடைந்து கொள்ளும் நோக்கிலே இவற்றை கடைப்பிடித்தவர்களும் எல்லா நாளும் கடவுளின் நாளே, எல்லா நேரமும் கடவுளின் நேரமே நாம் மேற்கொள்வது எல்லாம் கடவுளின் புகழ்ச்சிக்காகவே என்று கடவுளை எல்லாவற்றிலும் மேன்மைப்படுத்துபவர்களும் செய்கின்றார்கள். சில சிறப்பான நாட்களில் நோன்பு இருப்பவர்களும்,எல்லா நாளிலும் ஆண்டவருக்கு நன்றிகூற அதனை உண்பவர்களும் விளைகின்றனர்.

### எம்மை நாமே கேள்வி கேட்க வேண்டும்

இந்த உலகத்திலே நாம் வாழ்வதற்கு வாழ்வை கொடையாகப் பெற்றதற்குக் காரணம் நாமுமல்ல. நமது பெற்றோரும் அல்ல. எல்லாம இறைவனின் திருவுளம். இறைவன் நல்ல மூளையை,அறிவை தந்துள்ளான். அதனை மனித சமூகத்தின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.ஆனால் நாம் அவ்வாறு செய்வதில்லை. இறைவன் நாம் வாழ்வாங்கு வாழ வாழ்வியல் முறைகளைக் கடைப்பிடிக்க கட்டளைகளைத் தந்துள்ளான். சமூகத்தில் ஒழுக வேண்டிய முறைகளை சமூக வழிகாட்டிகள் மூலமாக பெற்றுக் கொள்கின்றோம். இவற்றிலே பின்பற்ற வேண்டும் என்று கூறப்பட்ட நடைமுறைகளை விட அதற்கு எதிரான செயற்பாடுகளை செய்கின்றோம். எம்மிடம் வசதி வாய்ப்புக்கள் இருக்கும் போதும் ஒரு நிலையும், இல்லாத போது வேறு நிலையையும் கடைப்பிடிக்கின்றோம். அயலார் மட்டில் பிறத்தியாரின் அன்பற்றவர்களாக, கருணையற்றவர்களாக, உதவிகள் செய்யாதவர்களாக, உபத்திரவம் கொடுக்கின்றவர்களாக மாறுகின்றோம. இவற்றிற்கெல்லாம காரணம் கடவுளை முன்னிலைப்படுத்தாததே காரணமாகும்.

### விட்டுக் கொடுக்கும் பண்பு வேண்டும்

மனிதர்களுக்கிடையே போட்டி மனப்பான்மையும் வஞ்சகமும் அகமபாவமும் நிறைந்து காணப்படுகினறது.மனமொத்து ஒரு செயலை செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. மற்றவர்களை நானே அடக்கி ஆள வேண்டும் எனக்கு இயலாத போதும் நானே தலைமை வகிக்கவேண்டும். மற்றவர் விடுகின்ற சிறு தவறுகளையும் என்னால பொறுத்துக்கொள்ள முடியாது.

ஆனால் இயேசு சொல்கிறார் "உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால்,விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். அவ்வாறே இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாக கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்கு சொல்கின்றேன்" (மத்தேயு 18:18-20) இதிலிருந்து இருவர் மனமொத்திருத்தல் எவ்வளவு கடினமானதென்று அறியலாம். ஏனென்றால் மனிதன் சுயநலமுள்ளவன்.

### இறைவனுக்காக வாழ்தல்

அகந்தையே அறியாமையை கொண்டுவரும். தாழ்ச்சி மனமொத்தலைத் தரும்.நாம் பிறரை மன்னிக்கலாம்.பிறர் எம்மை மன்னிக்க வேண்டும். கடவுள் எங்களை மன்னிப்பாரென்று மனக்கோட்டை கட்டுவதால் விளைவது எதுவும் இலலை.

நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் இறைவனுக்கென்றே வாழ வேண்டும். இறைவனுக்கென்றே இறக்க வேண்டும். இல்லையேல் எமது கர்வம் ஒரு கண்ணிமைப் பொழுதில இறைவனால் தகர்த்தெறிய முடியும். ஆனால் இறைவன் மனிதன் திருந்த வேண்டுமென்றே காலம் தாழ்த்துகிறார். அவர் இயாலாதார் அல்ல. இரக்கமுள்ளவர்.

**யாழ்.ஜெயம்தாசன்**

எனவே மானிடா நீ வாழும் காலத்திலே பிறரை மதித்து மன்னித்து ஏற்றுக்கொண்டு வாழ முயற்சிசெய். தன்னலம் துறந்து வாழ். நன்மை செய்யும் சந்தர்ப்பங்களைத்தேடு. நல்லவர்களை உருவாக்க பாடுபடு. அநீதங்கள் தொடர்வதை அனுமதியாதே. சமூக ஒற்றுமைக்காக பாடுபடு. பிறருக்கு உதவி செய்ய ஆசைப்படு.நீ ஆண்டவனின் கருவி என்பதை எண்ணிக் கொள் எல்லாவற்றையும் இயக்குபவர் இறைவன் என்பதை வெளிப்படுத்து இறைவன் கருணையும் ஆசீர்வாதங்களும் உன்னைத் தொடரும்.□

## நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இச் சங்கத்தின் புதிய தலைவராக க.சிவானந்தமூர்த்தி, உப தலைவராக இ.இரத்தினம், செயலாளராக பொ.ஆழ்வாப்பிள்ளை, உபசெயலாளராக திருமதி நாச்சியார் செல்வநாயகம், பொருளாளராக தி.வேலநம்பிஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன்,

க.க.அருள்வேல், கலாநிதி செ. இளங்குமரன் ஆ.சத்தியசீலன், செல்வி வி.நாகேஸ், கலாநிதி கே. ரகுநாதன் ஆகியோர் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற)

## சமுர்த்தி முத்திரை விநியோகம்

(ஊரெழு)

ஊரெழு ஜே/267இல் வசிக்கும் குடும்பஸ்தர்களுக்கான சமுர்த்தி முத்திரை கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சமுர்த்தி உத்தியோகத்தரினால் கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுகின்றது.

இம் முத்திரையைப் பெறுவதற்கு ஊரெழுவில் 318 குடும்பங்கள் முதற் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (த-25)

## 'கொல் ஈனுங் கொற்றம்'

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தினரின் ஏற்பாட்டில்'கொல் ஈனுங் கொற்றம்'என்ற கூத்துருவ நாடகம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை பி.ப 4மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் உருவான மேற்படி கூத்துருவ நாடகம் அண்மையில் யாழ்ப்பாணம், கொழும்பு,வவுனியா,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டிருந்தது.

ஈழத்தவர்களின் சகல கூத்து மரபுகளையும் ஒருங்கே இணைந்து சிறநத ஒரு படைப்பாக திருமலைக கலாமன்றம் 'கொல் ஈனுங் கொற்றம்'என்ற கூத்துருவ நாடகத்தை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-51)

## இராசிபலன்

30.10.2005
(ஐப்பசி 13, ஞயிற்றுக்கிழமை)
திரயோதசி முழுவதும்
உத்தரம் முற்பகல்- 12.06 மணி வரை
இராகுகாலம்-4.33-6.03 மணிவரை
சுபநேரம்-9.03-10.33 மணிவரை
பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், போசன நன்மை. |
| இடபம் | வியாபார சிந்தை, சிறு வியாதி, குடும்பக் கவலை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | உடல் நலக்குறைவு, மாதா சுகம், எடுத்த காரியம் தாமதமாகும், மனப்பயம். |
| கடகம் | சகோதரர் உதவி, பிரயாண நன்மை, முயற்சி கைக்கூடும், தனவருவாய். |
| சிங்கம் | திடீர் நன்மை, வேலைச்சுமை, காரிய தாமதம், பணவருவாய். |
| கன்னி | தேக நலன், சயன சுகம், முயற்சி பலிதம், கற்பனை மிகுதி. |
| துலாம் | வீண் அலைச்சல், சுபசெலவு, உறவினர் வெறுப்பு, வேலைச்சுமை. |
| விருச்சிகம் | இஷ்ட நிலை, பெருமையடைதல், போசன நன்மை, உறவினர் வருகை. |
| தனுசு | நல்ல செய்தி, அதிக பிரயாசை, நல்ல மனை செல்லல், அதிகாரம். |
| மகரம் | புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, காரிய தாமதம், நிலை மாற்றம். |
| கும்பம் | பிரயாண பயம், வீண்பகை, காரிய தடங்கள், பணவிரயம். |
| மீனம் | தெய்வ சிந்தை, முயறசி தாமதம், களஷ்திர நன்மை, செல்வாக்கு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# திட்டமிடப்பட்டபடி பட்ஜெட் நவ.8இல் சபையில் சமர்ப்பிப்பு

## ஜனாதிபதியிடம் ரணில் வேண்டுகோள் விடுப்பது தேவையற்றது என்கிறார் நிமால்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நவம்பர் 8ஆம் திகதியன்று 2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திட்டத்திற்கு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை நேரில் சந்தித்து ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையிலும் அரசாங்கம் திட்டமிட்டபடி அதனை அத்தினத்திலேயே சமர்ப்பிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பது தொடர்பில் ஏதேனும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்திருப்பின் அவற்றை கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் விவாதித்திருக்க வேண்டும். அவ்வாறின்றி அதுபற்றி ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுப்பது தேவையற்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியைத் தனியாகச் சந்தித்தபோது வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் திகதியை தேர்தலின் பின்வைக்குமாறு கேட்டிருந்தார்.

வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாக வைத்து மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரங்களை நடத்தி வருவதாகவும் அது நியாயமற்ற செயல் எனவும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தார்.

இவ் வேண்டுகோள் தொடர்பில் தனது அமைச்சர்களை கலந்தாலோசனை செய்த பின்னர் பதில் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## கட்டாக்காலிகளால் தொல்லை

(கற்கோவளம்)

பருத்தித்துறை நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளினால் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன.

பஸ்தரிப்பிட பயணிகள் தங்குமிடம், கடை வாசல்களை இக் கால்நடைகள் அசுத்தம் செய்வதோடு விபத்துக்கள் ஏற்படுவதற்கும் காரணிகள் ஆகின்றன.

இக்கட்டாக்காலி கால் நடைகளினால் ஏற்படும் தொல்லைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-104)

# சிறுநீர்ப்பை புற்றுநோயை கண்டுபிடிக்க புது வழி!

சிறுநீர்ப்பை புற்றுநோயை முனகூட்டியே கண்டுபிடிக்க இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் புதிய பரிசோதனை முறையைக் கண்டுபிடித்துள்ளனர்.



இந்த சோதனை மிகவும் இலகுவானது. இதற்காக பயாப்ஸி டெஸ்ட் எடுக்கவேண்டாம். ஊசிபோட வேண்டாம். சிறுநீர் மட்டும் போதும்.

சிறுநீரில் நிறைய என்சைம்கள் உள்ளன. இதில் டெலோமொரஸ் (telomerase)என்ற அளவு கணக்கிடப்படும். அப்போது இது மிகவும் கூடுதலாக இருந்தால் சிறுநீர்ப்பை உள்ளிட்ட புற்றுநோய்கள் இருக்கிறது என்று அர்த்தம்.

இருப்பினும், இந்த சோதனை முறையில் நிறைய மாற்றங்களை செய்யவேண்டும் என்றும் அதன் பறகே பயன்பாட்டுக்கு கொண்டு வரமுடியும் என்றும் டேனிலே காலிஸ் டிரி என்ற ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயைக் கண்டுபிடிக்க தற்போது நடைமுறையில் இருக்கும் பரிசோதனைகளுக்கு நிறையப் பணம் செலவாகிறது. இந்நிலையில் மேற்படி சோதனை வெற்றிகரமாக அமைந்தால், நிறையப் பணம் மிச்சமாகும்.

சிறுநீர்ப்பை புற்றுநோயை பொறுத்தமட்டில் முன்கூட்டியே கண்டுபிடித்துவிட்டால், பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளித்து, ஆயுட்காலத்தை அதிகரிக்க முடியும். (ற)

வாசிப்பு மாதம்
வாசியுங்கள் அகவிழி திறக்கும்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை
எனில் ஹவலக் ரவுணில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.
(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)
தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவநோக்கு...
C-அ-1755




# வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளா?



இவ்வருடம் ஒக்டோபர் மாதத்துடன் வடமாகாண முஸ்லிம்களின் அகதி வாழ்வுக்கு வயது 15 ஆகின்றது. காலம் காலமாக தமது பூர்வீக பூமியில் கௌரவத்துடன் வாழ்ந்த இந்த சமூகம் எவ்வித கால அவகாசமுமின்றி 1990ம் ஆண்டு ஒக்டோபர் இறுதி வாரத்தில் [illegible] இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் மிகப்பாரிய வடுவாக விளங்குகின்ற இந்த பலவந்த வெளியேற்றத்தின் பின்னால் அகதிகள் என்ற பெயர்தாங்கிகளாக இந்த சமூகம் ஏனைய மாவட்டங்களில் பல சவால்களுடன் வாழ்ந்து வருகின்றது..

வடமாகாண முஸ்லிம்களின் பூர்வீக கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளமை, முறையான நஷ்டஈடுகள் வழங்கப்படாமை, தொழில்வாய்ப்பு பிரச்சினைகள் போன்ற வாழ்வியல் நெருக்கடிகளுடன் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் காணப்படுகிறது. இவற்றை விட முக்கியமாக அவர்களின் பாதுகாப்பு பிரச்சினை குறித்த சர்ச்சை நோக்கப்பட வேண்டியுள்ளது. வடமாகாணத்தில் கணிசமான பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அல்லது அவர்களால் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்றன. எனவே இப்பிரதேசங்களில் மீள்குடியேறுவதற்கு இதுவரையில் முறையான பாதுகாப்பு உத்தரவாதத்தினை வழங்குவதிலோ அல்லது திட்டமிட்ட மீள்குடியேற்றங்களுக்கு உதவும் வகையிலோ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அமையவில்லை என்ற சிந்தனை வடக்கு முஸ்லிம்களிடம் வலுவாக உள்ளது. அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலே அமைந்திருக்கின்ற கிராமங்களில்கூட இயல்பு நிலை தோன்றாத நிலையில் மீள்குடியேற்றம் தாமதித்துள்ளது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கு முசலி போன்ற பகுதிகளிலே குடியேறுவதில் சிக்கல்கள் தோன்றுகின்றன. இடைக்கிடையே வெளியிடப்படும் பயமுறுத்தல் துண்டுப்பிரசுரங்கள் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை நிறுத்துமாறு அச்சுறுத்துகின்றன என மீளக்குடியேறச்சென்ற மக்கள் தெரிவிக்கின்றனர். அதேபோன்று விடுதலைப்புலிகளின் மிக இறுக்கமான பாதுகாப்பு வலயமாக காணப்படும் முல்லைத்தீவிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் மீள்குடியேறுவதற்கு அங்கு காணப்படும் பாஸ் நடைமுறைகள், போக்குவரத்தில் காணப்படும் இடைஞ்சல்கள், தமது கமஞ்செய்யும் நிலங்களை பெற்றுக்கொள்வதிலுள்ள பிரச்சினைகள் போன்றன தடைகளாக உள்ளன. யாழ் சோனக தெருப்பகுதியை எடுத்துக் கொண்டால் அது முழுமையாக அரசின் கட்டுப்பாட்டினுள் காணப்படுவதால் தொழில் செய்யும் நோக்குடன நூற்றுக்கும் குறைவான குடும்பங்கள் அங்கு சென்று குடியேறியிருக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் மாத்திரம்தான் இதுவரையில் 80 சதவீதத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் மீளக்குடியேறியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அகதிகளாக வாழ்ந்துவரும் பிரதேசங்களிலும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அகதி முகாம் வாழ்க்கை, அதில் காணப்படும் துயரங்கள் ஒரு புறம் இருக்க வளப்பங்கீடு தொடர்பான பிரச்சினை அண்மைக்காலங்களாக அதிகரித்து வருகின்றது. வெளியேற்றப்பட்டு வரும்போது ஒரு இலட்சத்திற்கும் குறைவாக இருந்த வடக்கு முஸ்லிம்களின் சனத்தொகை தற்போது 180,000 தாண்டியுள்ளது. அதே வேகத்தில் உள்ளூர் மக்களின் சனத்தொகையும் அதிகரித்திருக்கின்றது.

**- இக்பால் அஜீட்**

எனவே வளங்களை பெரியதொரு சனத்தொகை பகிரவேண்டிய நிலை காணப்படுகிறது. குறிப்பாக தொழில்வாய்ப்பு, அரசாங்க நியமனங்கள், கல்விசார் வள ஒதுக்கல்கள், காணி உரிமை என்பவற்றில் இப்பிரச்சினை தோன்றியுள்ளமைக்கு பல உதாரணங்களை சுட்டிக்காட்டலாம். உதாரணமாக ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாரிய ஆசிரியர் பற்றாக்குறையை காரணங்காட்டி கடந்த செப்டெம்பர் 21ம் திகதியிலிருந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது பகிஷ்கரித்து வருகிறார்கள். உள்ளூர் மாணவர்களை மட்டும் கருத்திற்கொண்டால் இந்த பாடசாலையில் ஆசிரியர்கள் போதுமானதாக காணப்பட்டபோதிலும் இப்பாடசாலையின் மாணவர் தொகையின் 90 சதவீதமாக காணப்படும் வடமாகாண முஸ்லிம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இன்னும் பல ஆசிரியர் நியமனங்கள் தேவைப்படுகின்றன.

அதேபோன்று பல்கலைக்கழக தேர்வு, அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற புதிய நியமனங்கள் என்பவற்றில் உள்ளூர் மக்களுக்கும் வெளியேற்றப்பட்ட மக்களுக்கும் இடையே பலத்த போட்டி நிலவுகிறது. மேலும் வெளியேற்றப்பட்ட மக்களின் வாக்குரிமையை அவர்களின் சொந்த இடங்களில் வழங்குவதா, அல்லது தற்போது வசிக்கின்ற மாவட்டங்களில் வழங்குவதா என்ற சர்ச்சையும் இந்த மக்களின் அரசியல் எதிர்காலத்தை பாதித்துள்ளது. இந்த விவகாரத்தை பொருத்தவரையில் பெருமளவிலான வடமாகாண முஸ்லிம்களின் வாக்குரிமை அவர்களின் சொந்த இடங்களிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் இடம்பெயர்ந்து வாழும் பிரதேசங்களில் பெறக்கூடிய அபிவிருத்திகளை பெறமுடியாதுள்ளது இவ்வாறு இன்று வாக்குப்பதிவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் வளங்களை பெற்றுக் கொள்வதற்காக உள்ளூர் மக்களுடன் போட்டிபோட வேண்டிய சூழல்கள் என்பன அவர்கள் அரசியல் அனாதைகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எமக்கு உணர்த்துகிறது.







பெண்கள் இலங்கையின் சனத்தொகையில் 52வீதமானோர் பெண்கள் பல்வேறு பிரச்சனைகளையும், சவால்களையும் எதிர் கொண்டாலும் அண்மைக்காலங்களில் தாம் எதிர்நோக்கும் இப்பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் நல்ல முறையில் முகம் கொடுக்கும் நிலை உருவாகி வருகிறது. இன்று பொருளாதார துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு அதிகரித்துள்ளது. சிறு கைத்தொழில் தொடக்கம் பாரிய நிறுவனங்கள் வரை பெண்கள் பல துறைகளில் ஈடுபடுவதுடன் பல்வேறு நிர்வாக பொறுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல் கல்வி துறையிலும் பெண்களது பங்களிப்பு பிரமிக்கத்தக்களவு வளர்ச்சி யடைந்துள்ளது. இன்றைய பல்கலைக்கழக அனுமதியிலும் பெண்களே முதலிடம் வகிக்கின்றனர். எனினும் பெண்களின் அரசியல் பங்களிப்பை எடுத்து நோக்கும் போது மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுவதானது மிகவும் துரதிஷ்டவசமான நிலையாகும். எவ்வளவு தான் பெண்கள் ஏனைய துறைகளில் முன்னேறினாலும் அரசியல் துறையில் காணப்படும் இவ்வீழ்ச்சி நிலையினால் தாம் எதிர்நோக்கும் இப்பிரச்சினைகள், சவால்களில் இருந்து இன்னும் முழுமையாக மீட்சி பெற முடியாத நிலையே காணப்படுகிறது.

இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் உள்ளூர் மட்டங்களில் 1.7 வீதமாகவும், பிரதேச மட்டத்தில் 2.9 வீதமாகவும், தேசிய மட்டத்தில் 4.9 வீதமாகவும் காணப்படுகிறது. இது ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது மிகவும் குறைந்த மட்டமாகும். இது குறைந்தது 30 சதவீதத்திற்கேனும் அதிகரிக்கப்பட்ட வேண்டும் என்பதே இன்றைய தேவையாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் இவ்வாறு பெண்களது அரசியல் பிரதிநிதித்துவம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அரசியல் பற்றிய பெண்களின் மனப்பாங்கு, அரசியலில் காணப்படுகின்ற ஆணாதிக்க நிலை, பெண்களுக்கு பாதுகாப்பற்ற தற்போதைய அரசியல் சூழல் போன்ற காரணிகள் பெண்களது அரசியல் பங்களிபின் வீழ்ச்சிக்கும், அவர்கள் அரசியலில் ஈடுபட பின்நிற்பதற்கு காரணங்களாக கொள்ள முடியும்.

பெரும்பாலான பெண்கள் அரசியல் ஆண்களுக்குரிய விடயமாகவே கருதுகின்றனர். அரசியலின் ஊடாக தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதனையும் அரசியலில் தமக்குள்ள பொறுப்பு என்ன என்பதையும் பெரும்பாலான பெண்கள் உணராமல் இருக்கின்றனர். ஆண்களை போலவே சமூகத்தில் பெண்களுக்கும் பொறுப்புக்களும், கடமைகளும் காணப்படுகின்றன. இப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அரசியல் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்தோடு நமது நாட்டின் பெண்களின் துரதிஷ்டவசமான வாழ்க்கை நிலையை மாற்றியமைப்பதற்கும், பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் முக்கியத்துவப்படுகின்றது. எனவே அரசியலில் பெண்களின் குரலை ஒலிக்கச்செய்வதுடன் இந்த நாட்டின் அரசியல் மற்றும் கொள்கை திட்டமிடல் நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இன்று அரசியலில் காணப்படுகின்ற ஆணாதிக்க நிலை பெண்களது அரசியல் பிரவேசத்திற்கு பெரும் தடையாக உள்ளது. நாட்டில் காணப்டுகின்ற அரசியல் கட்சிகள் பெண்களின் அரசியல் பங்களிப்பு குறித்த விடயங்களில் பாரபட்சமாக நடந்து கொள்வதும்,

**- ஏ. உசாமா**

நாட்டின் ஜனாதிபதி ஒரு பெண்ணாக இருந்தும் கூட பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படாதது என்பன கண்டனத்துக்குரிய விடயங்களாகும்.

அதேபோல் நாட்டில் காணப்படுகின்ற ஒழுங்கற்றதும், பாதுகாப்பற்றதுமான அரசியல் சூழ்நிலைகளும் பெண்கள் அரசியலில் ஈடுபட பின்னிற்பதற்கான காரணங்களாக கொள்ளப்படுகின்றன. நாட்டில் இடம்பெறுகின்ற அரசியல் படுகொலைகள், தேர்தல் வன்முறைகளினாலும் ஊழலும், ஒழுங்கற்ற அரசியல் நடவடிக்கைகளினாலும் பெண்கள் அரசியலை வெறுப்பதற்கும், அதிலிருந்து ஒதுங்குவதற்கும் காரணங்களாக அமைகின்றது. எனவே இந்நிலைகள் மாற்றப்பட்டு இவர்களின் அரசியல் பிரதிநிதித்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது எதிர்கால அரசியல் முன்னெடுப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான விடயங்களாகும்.

# ஜனாதிபதி எதிர்கட்சி தலைவர் சந்திப்பு இனப்பிரச்சனை தீர்வில் பங்களிக்குமா ?

**- என். ஜீவேந்திரன்**

இலங்கையின் நீண்ட கால இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசியல்வாதிகளின் சுயநலமே தடையாக இருந்தது என்பதை சகலரும் அறிவர். குறிப்பாக சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சியில் இருப்பவர்கள் தமிழ் தரப்புடன் ஏதாவது ஒரு இணக்கத்திற்கு வரும்போது அதற்கு எதிராக கடுமையான எதிர்ப்பு போராட்டங்கள் வெடித்து கிளம்பியிருக்கின்றன. இந்த செயற்கையான எதிர்ப்பு போராட்டங்களுக்கு பின்னால் நிச்சயமாக அந்த காலகட்டத்தின் எதிர்கட்சியும், இனவாத குழுக்களுமே இருந்திருப்பதை காணமுடியும்

எனினும், அண்மைக் காலங்களில் இந்நிலை மாற்றம் பெற்றுள்ளது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் ஆட்சியின் போதும் 2001ல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் போதும் எதிர்கட்சிகள் சமாதானத்தினூடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உடன்படுகின்றன. இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலின் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க தான் ஆட்சிக்கு வந்ததும் தீர்வு விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியுடன் இணைந்து செயற்பட போவதாகவும், அவர்களை இணைத்துக் கொண்டே தீர்வு முயற்சிகளில் ஈடுபடப்போவதாகவும் அறிவித்திருந்தார். மேலும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி இது தொடர்பாக கலந்துரையாட முன் வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த சந்திப்பு கடந்த 24ஆம் திகதி திங்களன்று இடம்பெற்றுள்ளது

இந்த சந்திப்பானது சமஷ்டி மூலமான தீர்வுக்கு இரு கட்சிகளும் கொண்டுள்ள இணக்கப்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதாக அமையக்கூடும். குறிப்பாக தற்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான



மஹிந்த ராஜபக்ஷ ஜேவிபியுடனும், சிஹல உறுமயவுடனும் கூட்டு சேர்ந்தததுடன் அக்கட்சிகளின் கொள்கைகளான ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வு, மற்றும் புலிகளுடனான கடும்போக்கு போன்றவற்றை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இச்சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் கால நாட்கள் எண்ணப்படுகின்ற சூழலில் மஹிந்த ராஜபக்ஷவிடமே சுதந்திர கட்சியின் பெரும்பாலான அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் குவிந்துள்ள நிலையில் ஜனாதிபதியுடனான சந்திப்பு பலனுள்ளதாக அமையுமா? என்ற கேள்வி எழுவது இயற்கையானதே. அதே வேளை சுதந்திர கட்சியின் தலைமையானது தொடர்ந்தும் சந்திரிகா அம்மையாரிடமே உள்ளது. யதார்த்தத்தின்படி மஹிந்த தேர்தலில் வெற்றி பெறுவாரானால் நிச்சயமாக சுதந்திர கட்சியின் மிகப்பெரும்பாலான உறுப்பினர்கள் அவரையே ஆதரிப்பர் என்பதும், சந்திரிகா அம்மையாரின் கட்டளைகளை உதாசீனம் செய்வர் என்பதும் வெளிப்படையானதே. அதே வேளை மஹிந்த தேர்தலில் தோற்பாராக இருந்தால் சந்திரிகா அம்மையாரின் கரம் பலமடையும் என்பதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறெனினும் கட்சி தலைமை சந்திரிகா அம்மையாரிடம் இருக்கும்போது பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக போட்டியாளர்களுக்கான அனுமதியை அவரே வழங்க வேண்டியிருக்கும். அப்போது அவர் தனது ஆதரவாளர்களையே முன்னிறுத்த கூடும். எனினும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரான பிறகு தொடர்ந்தும் அம்மையாருக்கே ஆதரவாக இருப்பார்கள் என்பதையும் உறுதியாக கூற முடியாது.

எனவே எப்படி பார்த்தாலும் ஜனாதிபதி எதிர்கட்சி தலைவர் சந்திப்பானது ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இனப்பிரச்சனை தொடர்பில் தீர்வுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அத்துடன் இனவாதிகளுக்கு இந்த சந்திப்பானது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் இயல்பானதே.

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு **7.30**மணிக்கும். TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு **7.25** மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

## இன்று ஒரு தகவல்

### மாணவர் பெருமை

ஒரு பெரிய காட்டின் மத்தியில் ஒரு ஆச்சிரமம் இருந்தது. அங்கே ஒரு முனிவர் இருந்தார். பல இடங்களிலுமிருந்து வரும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோரும் தங்கள் பிள்ளைகளை அவரிடம் அனுப்பிவைத்தார்கள். மன்னர்களுடைய பிள்ளைகள் கூட அவரிடம்தான் படிக்க வருவார்கள். ஆனால் அந்த முனிவரைப்பொறுத்தவரை எல்லாப்பிள்ளைகளும் ஒன்றுதான் இது யார் வீட்டுப்பிள்ளை என்று பார்க்கமாட்டார் எல்லோரும் சமம்.

மாணவர்களெல்லாம் அங்கேயே மாதக்கணக்கில் வருடக்கணக்கில் தங்கியிருந்து பாடம் கற்றுக்கொண்டுபோவார்கள். அவராகப் பார்த்துப் போவென்று சொல்லும் வரைக்கும் அங்கேயே இருந்துபடிக்க வேண்டும். ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் வந்து படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு 15 வயதிருக்கும் சில வருடம் கழித்து அந்த முனிவர் தன்னிடமிருக்கும் மாணவர்களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களுடைய அறிவு முதிர்ச்சியைக் கணிக்கப் பல சோதனைகள் வைத்தார்.

ஒவவொருவ்ராகப் பார்த்து இனிமேல் நீ உன வீட்டுககுப் போகலாம் என்று சொல்லி அனுப்பி வைத்துக்கொண்டிருந்தார் .எல்லோரும் போய் விட்டார்கள். கடைசியாக எஞ்சியிருந்தது ஒரேயொரு மாணவன் அவனை மட்டும் வீட்டுக்கு அனுப்பவில்லை. அந்த மாணவன் யார் தெரியுமா? ராஜகுமாரன்தான். அந்த ராஜகுமாரனுடைய தந்தைக்கு அதுதான் ராஜாவுக்கு வயதாகிவிட்டது. படிக்கப் போன மகன் இன்னும் திரும்பிவரவில்லையே என்று நினைத்தார். வந்து விட்டால் விரைவில் அவனுக்குப் பட்டம் கட்டி விட்டு தான் விலகிக்கொள்ளலாமே என்று நினைத்தார். திருமணமும் செய்து வைக்க வேண்டும் ஆனால் மகனைக் காணவில்லை.

ராஜா நேரிலேயே போய் என்னவென்று பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்து காட்டுக்குப் புறப்பட்டார். அங்கே போய் முனிவரைப் பார்த்தார். முனிவர் இவரை அன்பாக வரவேற்றார். ராஜா மெதுவாக எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டிர்களாமே என் பிள்ளையை மட்டும் என்று இழுத்தார். முனிவர் இதற்கு உடன்பதில் சொல்லவில்லை. ராஜாவைக் கூட்டிக் கொண்டு போய் தங்க வைத்தார். உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் முதலிடம் பெற்றுவிட்டான். இப்படி முதலாவதாகவரும் மாணவனுக்கு நாங்கள் இன்னொரு தேர்வு வைப்பது வழக்கம் அதிலும் அவன் முதலாவதாக வந்துவிட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்ற கௌரவத்தை அடைவான் என்றார் முனிவர் அப்படிச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ராஜா அங்கேயே தங்கிவிட்டார். இரவு விடிந்ததும் எழுந்து அந்தக் குடிசைக்கு வெளியே வந்தார் பல் விளக்குவதற்காக அந்த சமயத்தில் ஒருவன் ஒரு கையில் கோடரியைவைத்துக் கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக்கட்டை சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தான். யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று நினைத்தார் ராஜா. அருகில் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால் அது தனது மகன் திகைத்துப் போய் விட்டார். என்ன இது ஒரு ராஜகுமாரனைக் கூட இது போன்ற வேலைகளைச் செய்யச் சொல்கிறார்களே என்று நினைத்தார்.

ராஜகுமாரன் விறகுக் கட்டைக் கொண்டு போய் கொல்லைப் பக்கம் வைத்தான். அந்த சமயம் முனிவர் அங்கே வந்தா. "என்ன மகனே! விறகு வெட்டிக்கொண்டு வந்துவிட்டாயா? சரி இப்போது ஒரு துடைப்பத்தை எடுத்துக்கொள் விருந்தினர் குடிசையின வாசல பககததை கூட்டிப் பெருககிச் சுத்தம் செய் போ" என்றார். அப்படியே செய்கிறேன் குருவே என்று கூறிவிட்டு சுத்தம் செய்ய ஆரம்பிததான் ராஜகுமாரன்.

இதை ராஜாபார்த்தார் உடனே ஓடிவந்தார் மகனே! என்ன காரியம் செய்கிறாய்? துடைப் பத்தைக் கீழே போடு என்றான். இப்போது அந்த ராஜகுமாரன் சொல்கிறான் தந்தையே ! இது என் குருதேவரின் உத்தரவு இங்கே நான் ஒரு மாணவன் இங்கே அரசனும் ஒன்று·தான் ஆண்டியும் ஒன்று தான் குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வதுதான் என் கடமை என்றான். இந்த சமயம் முனிவர் அங்கே வந்தார். இவனை முதுகில் தட்டிக்கொடுத்தார். அதன் பின்ராஜாவிடம் சொன்னார்.

அரசே! உங்கள் பிள்ளை எங்கள் இறுதித்தேர்விலும் வெற்றி பெற்று விட்டான். பணிவுதான் மாணவர்களின் மிக உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதிற்குப்பிடிக்காவிட்டாலும் கூட மறுக்காமல் செய்யவேண்டும். அப்படிச் செய்வதனால் எதை செய்யலாம் எதைச்செய்யக்கூடாது என்ற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும் செய்யக்கூடாதைப் பெரியவாகள சொன்னால அதைச் செய்துதான் ஆகவேண்டும் என்ற பணிவு வந்துவிடும். இந்த குணம் வந துவிட்டால் அவர்கள் எத்தனை கடினமான வேலையாக இருந்தாலும் `கூட சுலபமாக செய்து முடிப்பார்கள். துக்கத்திலும் துவண்டு போய்விட மாட்டர்கள்.இந்தப்பணிவும் விவேகமும் அவர்களிடம் மன உறுதியை ஏற்படுத்தும்.அந்த உறுதி உங்கள் மகனுக்குவந்துவிட்டது இனிமேல் அவனை நீங்கள் அழைத்துக்கொண்டுபோகலாம் அவன் நிச்சியமாகப் பேரும் புகழும் பெறுவான் என்றார் குருதேவர்.

ராஜா அவரைப்பார்த்து "குருதேவா... புரிந்து கொண்டேன என்னை மன்னிக்க வேண்டும் என்றார். அதன் பின் மகனை அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பிவந்து விட்டார். இந்தக் கதையை இன்று ஒரு தகவலில் சொல்லுங்கள் சார் மாணவர்கள் கேட்டால பணிவாக இருப்பது எப்படி என்பதை புரிந்து கொள்வார்கள். என்றார் ஒருவர். சரி சொல்லுவோம். அதற்கு முன்நேரிலேயே ஒரு மாணவனிடம் சொல்லிப் பார்க்கலாம் என்று நினைத்து ஒரு மாணவனைக் கூப்பிட்டேன்.

ஏனப்பா உங்கள் வாத்தியார் உனக்கு இதுபோல் ஒரு பரீட்சை வைத்தால் என்ன செய்வாய்? என்றேன் நானும் அப்படித்தான் சார் நடந்துகொள்வேன் விறகு வெட்டுவேன், துடைப்பத்தால் கூட்டி சுத்தம் செய்வேன் உடனே செய்துமுடித்து விடுவேன் என்றான.

அட! பரவாயில்லையே என்றேன். ஆமாம் சார் அப்படிச் செய்தால்தான வீட்டுக்கு அனுப்புவார் இல்லாவிட்டால் இன்னொரு வருடம் இங் கேயே இருந்துபடி என்று கூறிவிடுவாரே என்கிறான் அவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிவாரண உதவிகள் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

### ஐ.நா. அதிகாரி வலியுறுத்து

(கொழும்பு)

மோதல்கள் மற்றும் ஏனைய இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களைவிட கடந்த வருடம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிக உதவிகளைப் பெறுகின்றனர்.

எனவே உதவி தேவைப்படும் அனைவருக்கும் அவை பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகாரி தெரிவித்துள்ளனர்.

இரண்டு தசாப்த காலயுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் குறைவான உதவிகளைப் பெறுகையில் அதேபிரதேசத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் அதிக உதவிகளை வழங்குவதாக இடம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச மனிதாபிமான விவகாரங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணைப்புப் பிரிவு இயக்குநரான டெனிஸ் மெக்னா மெரா தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையினால் இடம்பெயர்ந்தவர்கள் சிறந்த தங்குமிட வசதிகள், அதிக உணவு முத்திரைகள், பணம் மற்றும் அதிக உதவிகளைப் பெறுகின்றனர். ஆழிப்பேரலை பெரும் அழிவை ஏற்படுத்தியது. அந்நிலைமை மீண்டும் ஏற்படுவதை நாம் யாரும் விரும்பவில்லை. எனினும் ஏனையவர்கள் புறக்கணிக்கப்பட்டுவருகின்றனர்.

உலகளாவிய ரீதியில் 25 மில்லியன் மக்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ளனர். அதே எண்ணிக்கையானவர்கள் இயற்கை அழிவுகளாலும் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

## பயங்கரவாத எதிர்ப்பு உடன்படிக்கையில் இலங்கையும் அமெரிக்காவும் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் பயங்கரவாதத்திற்கு எதிரான முக்கிய உடன்படிக்கையொன்று கடந்த வியாழக்கிழமை காலை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகத்தில் வைத்து இலங்கையின் சார்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜாவும் அமெரிக்காவின சார்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸடெட்டும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இவ் உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்பு சம்பந்தமான உதவகளை வழங்கும். பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சிகள். விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுகளை வழங்கல். உபகரணங்களை வழங்கல் என்பன இதில் அடங்குகின்றன.

அமெரிக்க அதிகாரிகளினால் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கையில் தற்போது இலங்கையில் இருக்கும் செயற்பாடுகள் மற்றும் நிலைமைகளை ஆராய்ந்து தேவைக்கேற்ப பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதிக்குப் பாதுகாப்பளித்தல், அரச சொத்துக்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பாதுகாத்தல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், பொதுமக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாத்தல், இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

இதேவேளை, பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான மேலதிக பயிற்சிகளையும் அறிவூட்டல்களையும் இலங்கை பொலிஸாருக்கு அமெரிக்க பொலிஸாரின் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. (ற-4)

### தேர்தல் பணிகளுக்கு அரச பணம் பயன்பாடு

## மஹிந்தவுக்கு எதிராக ஐ.தே.கட்சி இலஞ்ச ஊ. ஆ.குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் நடவடிக்கைகளுக்கு அலரிமாளிகையைப் பயன்படுத்துவதாகவும் அலரிமாளிகைக்கு வருபவர்களுக்கு பொதுமக்களின் பணத்தில் விருந்துபசாரங்களைச் செய்வதாகவும் தனது பயணங்களுக்கு அரசாங்கப் பணத்தை செலவிட்டு உலங்குவானூர்திகளில் செல்வதாகவும் குற்றம் சாட்டி ஐக்கிய தேசியக் கடசியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் பாரிய குற்றமெனக் கருதப்படுவதால் பிரதமருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு திஸ்ஸ அத்தநாயக்க தனது முறைப்பாட்டினூடாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதமர் தனது அரசியல் வைபவங்களில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு, பானங்களை வழங்குவதற்காக கொழும்பிலிருக்கும் கெலம்போ பிளாஸா ஹோட்டலுக்கு அரசாங்க பணத்திலிருந்து 5 இலட்சம் ரூபாவை வழங்கியிருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள திஸ்ஸ அத்தநாயக்க அதற்கான பற்றுச்சீட்டுகள் தன்னிடமிருப்பதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி கண்டியிலிருந்து முல்கிரிகல நோக்கிச் செல்வதற்கு விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியை பிரதமர் பெற்றிருப்பதாகவும் அதற்கென அரசாங்கப் பணத்தையே செலவிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் நாட்டின் பிரதமர் என்ற வகையில் கலந்து கொள்ளும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளுக்கு என உலங்குவானூர்திகளைப் பயன்படுத்துவதில் தமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்றாலும் அரசியல் நடவடிக்கைகளுக்கென அவற்றைப் பயன்படுத்துவது குற்றம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## புத்தூரில் இராணுவத்தினரின் அடாவடிக்கு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அப்பகுதியைச் சேர்ந்த வீடு ஒன்றினுள் புகுந்து அங்கிருந்த யுவதி மீது பலாத்காரம் செய்ய முற்பட்ட வேளையில் அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு இராணுவச் சிப்பாயை துரத்திய போது அச் சிப்பாய் தப்பிச்சென்று இராணுவ முகாமினுள் புகுந்துவிட்டார்.

இதனால் ஆத்திரம் கொண்ட அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் அதிகாலையில் இராணுமுகாமை நோக்கிச் சென்றபோது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள் காயமடைந்தனர்.

கடந்த காலங்கள் போன்று இனியும் எமது மக்கள் ஆயுதத்தைக்கண்டு அஞ்சி ஓடத் தயாரில்லை. ஏனெனில் இங்குள்ள மக்கள் அணி அணியாக தலைவன் பாசறை சென்று தற்காப்புப் பயிற்சியை முடித்துவந்துள்ளனர். இதனை இங்குள்ள இராணுவத்தரப்பினருக்கு வெளிப்படையாகவே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகளையும் அந்தந்த இடங்களுக்குச்சென்று பார்வையிட்டு வரும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் இவை பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை. இதனால் இராணுவத்தினரின் அடாவடிகளை பாாத்துக் கொண்டு நிற்பதறகு மட்டுமதான் கண்காணிப்புக்குழுவினரா? என்று எண்ணத் தோன்றுகிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## ஆனந்தாவில் சாதனை

(அல்லைப்பிட்டி)

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தில் இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஜெயரஞ்சன் சுஜிவ் என்னும் மாணவன் 158 புள்ளிகளைப் பெற்று சாதனை நிலை நாட்டியுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் இவர் 25ஆம் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி வித்தியாலயம் மாணவர் தொகையின்மையால் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள நிலையில் இம் மாணவனின் சாதனையால் புதிதாக மாணவர்கள் இப்பாடசலையில் சேரும் வாய்ப்பு கிடைக்குமென அதிபர் ஆ. சிவராசா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நீண்ட கலத்திற்குப் பின்னர் இப்படியொரு சாதனை நிலை நாட்டப் பெற்றமையை பாடசாலை சமூகம் வியந்து நிற்கின்றது. இம் மாணவனின் திறமைக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர் குழாம் மற்றும் ஆசிரியர் அன்பழகன் ஆகியோருக்கு அதிபர் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (த-98)

# உலகை அச்சுறுத்தும் பறவைக் காய்ச்சல்

உலக அளவில் அதிகமான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் உயிர்க்கொல்லி நோய்கள் பட்டியலில் புதிய அவதாரம் எடுத்திருப்பது பறவைக்காய்ச்சல் என்ற ப்ளூ நோய். இந்த நோயால் உலகில் ஐம்பது இலட்சம் முதல் 15கோடி மக்கள் வரை உயிரிழக்கும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

பெரும்பாலான ஆசிய நாடுகளை தாக்கிக் கொண்டிருக்கும் இந்தநோய் இன்னும் இலங்கையையும் இந்தியாவையும் எட்டிப்பார்க்கவில்லை. இந்நோய் பற்றிய விபரத்தை தெரிந்துகொண்டால் அதைத் தடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

1940ஆம் ஆண்டு இந்த நோய் பரவிய போது சுமார் 4கோடி பேர் உயிரிழந்துள்ளனர். தறபோது இது மீண்டும் பரவத் தயாராக இருக்கிறது. இதனால் உலகநாடுகள் முழுவதும் இந் நோயைக் கட்டுப்படுத்த பரபரப்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்க தயராகிவிட்டன.

பறவைக்காய்ச்சல் ஒரு பயங்கரமான தொற்றுநோயாகும். பறவைகளிடையே பரவும இந்த நோய் மனிதர்களிடையே பரவும் மிகப் பெரிய அபாயம் தற்போது ஏற்பட்டுள்ளது.

**பறவைக் காய்ச்சலை உண்டாக்கும் காரணிகள்**

இந்தநோய் மூன்றுவகையான வைரஸ்களால் பரவுகின்றது. அவை 'ஏ,பி'மற்றும் சி'என அழைக்கப்படுகின்றன.இதில் ஏ வகை வைரஸ் விலங்கினம் மற்றும் பறவை இனங்களைத் தாக்கும்.

பறவை,வாத்து,கோழி,பன்றி,குதிரை மற்றும் கடல்வாழ் பாலூட்டிகள் இதனால் பாதிக்கப்படுகின்றன.பறவைக் காய்ச்சல் இந்த வகை வைரஸ்களால் பரவுகின்றன. இதற்கு'எச்5,என்1'எனப் பெயரிட்டுள்ளார்கள். இந்த வைரஸ் மனிதர்களைத் தாக்கும் அபாயமும் அதிகரித்து வருகிறது.

2004இல் தாய்லாந்து,வியட்நாம் உட்பட 6 ஆசிய நாடுகள் இந்த நோயால் பாதிக்கப்பட்டன.முதன்முறையாக 34 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அவர்களில் 23பேர் இறந்துவிட்டனர்.

நாம் எதிர்பார்க்காத சமயத்தில் திடீரென வந்து தாக்குகிறது இந்தநோய். ஆசிய நாடுகளில் சுமார் 80சதவீதம் பறவை வளர்ப்பு கிராமப் புறங்களில் நடைபெறுகின்றன. இதனால் அந்த இடங்களில் இந்த நோயின் அபாயத்தை எடுத்துக்கூறி தற்காப்புக்குரிய நடவடிக்கைகளை எடுப்பது மிகப் பெரிய சவாலாகும்.

**ஆரம்ப அறிகுறிகள்**

இந்த நோய் பரவும்போது மூன்று வித அறிகுறிகள் மனிதர்களிடம் தெரியவரும். மனிதர்களிடம் தடுப்பு

1.சக்தி இல்லாத புதுவகையான வைரஸ்கள உருவாக்கம்.

2.மனித உடல்களை இந்த வைரஸ்கள் சுலபமாக ஆக்கிரமிக்கும் தன்மை.

3.ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு சுலபமாகப் பரவும் இயல்பு.

இந்த 'எச்5,என்1'வைரஸ் மனித உடலை



சுலபமாகப் துழைப்பதை விஞ்ஞானிகள் தெட்டத்தெளிவாக நிரூபித்துள்ளனர். இவ் வைரஸ் ஒரு மனித உடலில் பரவும் புது வகையான வைரஸாக உருவெடுத்தால் மிகப்பெரிய அபாயத்தை உண்டாக்கும்.

**காய்ச்சல் பரவும் வழி**

'எச்5,என்1'வைரஸ் இரண்டு வகைகளில் மனித உடலில் பரவும் வாய்ப்புக்கள் உள்ளன.

1.இந்த வைரஸ்கள் மற்ற வைரஸ்களோடு கலந்துவிடுதல், 2.மரபுவழியாகப் பாதிப்பை உண்டாக்குதல்.

ஒருமுறை வைரஸ் தொற்றி அதற்கு தடுப்புமருந்து கொடுத்தால் அந்த வைரஸ், அந்த மருந்தை எதிர்க்கும் வகையில் தன்னை மாற்றிக்கொள்ளும். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் வைரஸ்கள் புதுப் புது தோற்றத்துடனும், தன்மையுடனும் மாறிக்கொண்டு வருகின்றன. இதனால் கடந்தமுறை பயன்படுத்திய தடுப்பு மருந்து அடுத்தமுறை வேலை செய்யாது. புது வகையான மருந்தே இதற்குத் தேவைப் படும்.

**இன்புளூவென்சா வைரஸ் பாதிக்கும் பகுதிகள்**

இந்த வைரஸ் மூக்கு,தொண்டை, நுரையரல் ஆகிய பகுதிகளை தாக்குகின்றன. முதலில் காய்ச்சல்,உடல் சில்லுடுதல், வறண்ட இருமல், தலைவலி, உடல்வலி, சோர்வு ஆகியவை ஏற்படும்.

- குமட்டல்,வாந்தி,வயிற்றுப் போக்கு ஆகிய இரைப்பை குடல் சார்ந்த நோய்களும் உண்டாகும்.

சுவாசக்குழல் சார்ந்த நோய் உள்ளவர்களுக்கு இந்த நோயின் பாதிப்பு அதிகமாக இருக்கும்.

ஆஸ்துமா நோயாளிகள் ப்ளூ காய்ச்சலால் பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகம். ஆஸ்துமா நோயாளிகள் ப்ளூ காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தை பயன்படுத்தும் போது 22முதல் 41சதவீதம் வரை பாதிப்பின் அளவு குறைகிறது.

**இதயம் சார்ந்த பாதிப்புக்கள்**

இதயம் சார்ந்த பாதிப்புள்ளவர்கள் ப்ளூ நோய் தொற்றினால் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றாலும் அவர்கள் உயிரிழக்கும் அபாயம் அதிகம். இவர்கள் ப்ளூ தடுப்பூசி போட்டுக்கொள்வது நல்லது. 19சதவீதம் பாதிப்புக் குறையும்.

நிமோனியாவும்,இன்புளூவென்சாவும் உலகில் நீரிழிவால் பாதிக்கப்பட்டோரின் மரணத்திற்கு 6ஆவது காரணமாக விளங்குகின்றன. இவர்கள் ப்ளூ தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது நல்லது.

நீடித்த நுரையீரல் நோயுள்ளவர்கள் அதிகமாக ப்ளூ காயச்சலால் பாதிக்கப்படலாம்.

இவர்கள் தடுப்பூசியை அவசியம் போட்டுக் கொள்ள வேண்டும்.கர்ப்பிணிகளுக்கும் கர்ப்ப காலத்தின் முதல் மூன்று மாதத்தில் ப்ளூ காய்ச்சல் வரும வாய்ப்பு அதிகம் இருப்பதால், மருத்துவர் ஆலோசனையின் படி குறிப்பிட்ட காலத்தில் ப்ளூ தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

தடுப்பூசி போட்டுக்கொள்ளும் முன்பு அது தற்போது கண்டுபிடிக்கப்பட்டதா? நோய் எதிர்ப்புத் திறன் மிக்கதா? என்பதை மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல அவசியமாகும். (ற)

## அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விடுதிகளில் இருந்து கல்வி கற்கின்ற வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட அதிஷ்ட இலாபச் சீட்டுழுப்பில் வெற்றியீட்டிய அதிஷடசாலிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு,

பரிசுக்குரிய இலக்கங்கள்

1ஆம் பரிசு-2630, 2ஆம் பரிசு-4842, 3ஆம் பரிசு-2222

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

8101,7191,9547,7074,8298,7969,9845,0619, 3800,5714 இதற்கான பரிசுப் பொருட்களை பாலசிங்கம் விடுதியில் பெற்றுக்கொள்ளலாமெனவும் மேலதிக விபரங்களை 0773174 499 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மெய்கண்டான் குருபூசை

(சுன்னாகம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களததினால் நடாத்தப்படும் மெய்கண்டான் குருபூசை எதிர்வரும் 2ஆம் திகதி சுன்னாகம கதிரமலை சிவன்கோயிலில் பிற்பகல் 2 மணிக்கு அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந நிகழ்வின் போது கலைநிகழ்ச்சிகளும இடம் பெறவுள்ளன. (ற-7)

**விமான நிலையத்தில் வல்லுறவுச் சம்பவம்**

## கைதானோரில் ஒருவருக்கு விளக்கமறியல் ஏனைய நால்வரும் பிணையில் விடுதலை

(கொழும்பு)

ஜிம்பாப்வே தொடர் சச்சினுக்கு அவ்வளவாகக் கை கொடுக்க வில்லை. ஆனால் தென் ஆபிரிக்காவின் கடினமான மைதானங்களில் சிறப்பாக விளையாடிய சச்சின் ஜொஹான்னஸ்பர்கில் தனது நான்காவது சதத்தைப் பூர்த்தி செய்தான். என்றாலும் அந்தத் தொடரில் இந்திய அணி தோல்வி அடைந்தது.



1993 ஜனவரியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு விளையாட வந்தது. தென் ஆபிரிக்கப் பயணத்தின் சோகமான நினைவுகளை இந்திய அணி மறப்பதற்கான மருந்தாக அந்தத் தொடர் அமைந்தது. குறிப்பாக சச்சினின் இளம்பருவத் தோழன் வினோத் காம்ப்ளியின் கிரிக்கெட் வாழ்க்கை மிகப் பெரிய திருப்புமுனையைச் சந்தித்தது!

சச்சினைப் போலவே தான் காம்ப்ளியும் கிரிக்கெட்டுக்காகவே சாரதாஷ்ரம் வித்யமாந்தீர் பள்ளியைத் தேடிவந்து சேர்ந்திருந்தான் சாரதாஷ் மத்தின் கிரிக்கெட பயிற்சியாளராக இருந்த அச்சேரகரிடம் சச்சினும் காம்ப்ளியும் ஒரே நேரத்தில் தான் சேர்ந்தார்கள் அவரது நெட்களிலும் பல்வேறு போட்டிகளலும் சாரதஷ்ரம் பள்ளி அணிக்காகவும் இருவரும் சேர்ந்தே விளையாடினார்கள். கிரிக்கெட் மேல் கொண்டிருந்த அதீத ஆர்வம் அவர்களை மிகவும் ஆத்மார்த்தமான சிநேகிதர்களாகச் செதுக்கியது.

மிக இளம் வயதிலேயே ரஞ்சிப் போட்டிகளுக்கான மும்பை அணிக் கும் பின்னர் இந்திய அணிக்கும் தேர்வான சச்சின் மளமளவென்று புகழின் உச்சிக்கே போய்விட்டது. எல்லோரும் அறிந்த விஷயம் ஆனால் சச்சினோடு ஆடத் துவங்கிய காம்ப்ளியின் கிரிக்கெட் பயணம் நிதானமானதாக இருந்தது. இந்தியாவுக்காக சச்சின் விளையாடத்துவங்கி இரண்டு வருடங்கள் கழிந்த பிறகுதான் காம்ப்ளிக்கு அந்த வாய்ப்பு கிடைத்து. காம்ப்ளியின் சர்வதேச கிரிக்கெற் வாழ்க்கை , சற்றே தாமதமாகத்துவங்கினாலும், அவனது திறமைகள் பழிச்சிடும் படியான வாய்ப்புகள் விரைவிலேயே அவனுக்குக்கிடைத்தன குறிப்பாக இங்கிலாந்துடெஸ்ட் தொடர் காம்ப்ளியை மிக உயரத்துக்கொண்டுசென்றது. *(தொடரும்)*

## எடை குறைய இலகு வழி!

தூங்கினால் எடை போட்டு விடும் என்று பலரும் நினைக்கிறோம ஆனால் இதில் உண்மை இல்லை.

பதிலாக இரவில் நன்றாகத் தூங்கினால் எடை குறையும் என்று கனடா ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வானகூவரில் உள்ள பல்கலைக் கழகததில் தூக்கத்திற்கும் உடல் எடைக்கும் இடையே உள்ள சம்பந்தம் தொடர்பாக ஆராய்ச்சி நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டவர்களில் 5 அல்லது 6 மணி நேரம் தூக்கம் கொண்டவர்களுடன் ஒப்பிட்ட போது,7 அல்லது 8 மணி நேரம் தூங்கியவர்கள் ஒல்லியாக இருந்தனர். (ஆரோக்கியமான மனிதனுக்கு 8 மணி நேரம் தூக்கம் தேவை என்பது குறிப்பிடத்தக்கது).

ஆராய்ச்சியின் போது அனைவருக்கும் இரதத்தில் உள்ள லெப்டின் (Ietptin) என்ற ஹார்மோன் கணக்கிடப்பட்டது பெரும்பாலும்



உடம்பின் கொழுப்பு செலகளில் காணப்படும் இந்த ஹார்மோன் பசியை ஒழுங்குப்படுத்தும் வேலையைச் செய்கிறது.

இந்நிலையில் போதுமான அளவுக்கு தூக்கம் இல்லாதவர்களின் உடலில் மேற்படி ஹார்மோன் குறைவாகக காணப்பட்டது. ஹார்மோன் அளவு குறைந்தால் பசி அதிகரிக்கும். விளைவு அதிகமாக சாப்பிடுவதால் உடல் எடை போ்டும் கொழுப்பும் அதிகரிக்கும்.

தூக்கித்திற்கும் உடல் எடைக்கும் இடையே உள்ள தொடர்பு இப்போது புரிகிறதா? (ற)

## அளவுக்கு மிஞ்சினால்...

ஆசிய நாட்டுப்பெண்கள் குறிப்பாக கட்டடவேலைகள் போன்ற கடினமான வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் அதிகமாக தேநீர் அருந்துவதால் "ஸ்டியோபொரோசிஸ் எனப்படும் எலும்பு தேய்வு நோய் அதிகளவில் காணப்படுவதாக நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் நியூட்ரிஷன் என்னும் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஆந்திராவில் ஐதராப்பாத்தை தலைமையாகக் கொண்டு செயலபடும் இந்த நிறுவனம் பெண்களிடம் பிரத்தியேக ஆய்வு ஒன் றியை நடத்தியதுடன் மருத்துவரீதியான சோதனைகளும் நடத்தப்பட்டதன.

டியூயல் எனர்ஜி எக்ஸ்ரே அப்ஸாப்ரி மெட்ரிக் எனும் முறையில் எலும்பின் பலம் கண்டறியப்பட்டது. இவர்கள் நடத்திய மருத்துவ சோதனையில் 100 சதவீததில் 43 சதவதம் பேருக்கு "ஸ்யோபொரோசிஸ்" காணப்பட்டது. 43 சதவீதம பேரின் முதுகெலும்புகள் பலவீனமான நிலையில் இருந்தன. 14 சதவீதம் பேரின் எலும்பு மட்டுமே இயல்பான பலமான நிலையில் இருந்தன.

இதற்கான காரணங்களை ஆராயும் போது அவர்களின் தொடர் தேநீர் பழக்கமே இதற்குக்காரணமென தெரிய வந்துள்ளது. ஆசிய நாட்டுப்பெண்களின் வேலையின் தன்மையும் வேலை பார்க்கும் சூழ்நிலையுமே அவர்களின் தேநீர் பழக்கத்தை நிர்ணயம் செய்கின்றது. தேநீர் எலும்புகளில் உள்ள கல்சியத்தின் அளவைக் குறைத்து விடுகின்றது எனத் தெரியவந்துள்ளது. (ற)

## முன்பள்ளி ஆசிரியர்களின் சேவை எமது சமூகத்திற்கு அவசியமானது

(பருத்தித்துறை)

"முன்பள்ளி ஆசிரியர்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையை வளம் படுத்தி வருகின்றனர். தமிழ் இனத்திற்கு விடிவு கிடைக்கும் போதுதான் முன்பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கை வளம் பெற முடியும்.

மேற்கண்டவாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பிள்ளை நேய அபிவிருதத்தி நிலையங்களுக்கான கண்காட்சியிலும்,கலைவிழாவிலும பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜி.ரீ.சற் நிறுவன இணைப்பாளர் எஸ்.டிவகலாவ குறிப்பிட்டார். இவ்விழாவை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சும்,மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தன. இதில் வடமாகணத்தின் 11 கல்வி வலயங்களைச் சேர்ந்த முன்பள்ளிகள் பங்குபற்றினர்.

விழா வடமராட்சி வலயக்கல்வப்பணிப்பாளர் வி.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது. வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் ரீ.சத்தியசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஆரம்பத்தில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய நடுவப் பணிப்பாளர் எஸ்.பாண்டியன் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பிததுவைததார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம் நடாவை வெட்டி கண்காட்சியைத் திறந்து வைத்தார். தொடர்ந்து உரையாற்றிய ஜி.ரீ.செற் இணைப்பாளர் டிவகலாவ குறிப்பிடுகையில்,

முன்பள்ளி ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவைகள் இன்றைய எமது சமூதாயத்திற்கு மிக அத்தியவசியமானது. முன்பள்ளி ஆசிரியர்கள் நீண்ட காலமாக பல்வேறு பிரச்சினைகளின் மத்தியில் குறைந்த வேதனததிலேயே பணியாற்றி வருகினறனர். இவர்கள் போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது மிகக் கவலைக் குரியதாகும். இன்றைய நிலையிலேயே சமூகப் பணியாறறும் முன்பள்ளி ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பெற்றோர்களும் ,நலன் விரும்பிகளும், முன்பள்ளிகளின் அபிவிருததிகளுக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவநேசன, வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயதம்பையா, தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ். மாவட்டப்பணிப்பாளர் கே.ஜெயராஜா, அதிபர் எஸ்.சேதுராஜா உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர்.

இக் கண்காட்சியும் கலை விழாவும் இரு நாட்கள் நடைபெற்றன. (த-52)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL

5

# டெஸ்ட் கிரிக்கெற் போட்டி

நீண்டகால நாட்களைக் கொண்ட போட்டியாக இது கருதப்படுகின்றது. 5 நட்களைக் கொண்ட போட்டியாக நடைபெறும் டெஸ்ட் போட்டி இரண்டு அல்லது ஆறு போட்டிகளைக் கொண்ட போட்டித் தொடரும் இடம் பெறுகின்றது.

ஆரம்பத்தில் இரசிகர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற இவ் டெஸ்ட் போட்டி நீண்ட நாட்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்றதால் படிப்படியாக வீழ்ச்சிகண்டது. இருந்தும் தற்போதும் இப்போட்டி நடைபெற்றுவருகின்றன.

முதலாவது டெஸ்ட் போட்டி 1877ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் நடைபெற்றது.

ஐ.சீ.ஸியில் அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணிகள் அங்கத்துவ நாடுகளாக இடம் பெற்றிருந்தன.

பின்னர் தென்னாபிரிக்கா 1889 ஆம் ஆண்டும், நியூஸிலாந்து 1930 ஆம் ஆண்டும், மேற்கிந்தியா 1930 ஆம் ஆண்டும், இந்தியா 1932 ஆம் ஆண்டும், பாகிஸ்தான் 1954 ஆம் ஆண்டும், இலங்கை 1982ஆம் ஆண்டும், சிம்பாப்வே 1992ஆம் ஆண்டும், பங்களாதேஷ் 2000 ஆம் ஆண்டும் இணைந்து கொண்டன.

இந்தப் பத்து நாடுகளே தற்போது டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகளாகக் காணப்படுகின்றன.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரை முடிசூடா மன்னாக அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன் கருதப்படுகின்றார். துடுப்பாட்டத்தில்

## நோயல்

எவருமே எட்டமுடியாத சாதனைகள் மட்டுமல்ல சிறந்த சராசரியையும் கொண்டுள்ளார்.

52 போட்டிகளில் கலந்து கொண்ட இவர் 6996 ஓட்டங்களை 99.94 என்ற சராசாரியுடன் பெற்றுள்ளார். இறுதியாக விளையாடிய போட்டியில் 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தால் பிரட்மனின் சராசரி 100 ஆக இருந்திருக்கும். இருந்தும் துரதிஷ்டவசமாக அப்போட்டியில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதைய கள நிலவரப்படி அவுஸ்திரேலிய அணி 127 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருந்து வருகிறது.

### புள்ளிகள் கணிப்பிடும் முறை

ஒவ்வொரு டெஸ்ட் தொடரின் பின்னரும் இரு அணிகளும் ஒரு கணக்கீட்டு அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான புள்ளிகளைப் பெறும் இறுதியான விகிதத்தினைப் பெறுவதற்கு ஒவ்வொரு அணியினதும் புதிய புள்ளிகளின் மொத்தம் அதன் புதிய ஆட்டத் தொடரின் மொத்தத்தினால் பிரிக்கப்படுகின்றது. சராசாரியான துடுப்பாட்டத்துடன் அடுத்த இனிங்ஸில் விலகினால் சராசரி அதிகரிக்கும்.

மாறாக சராசரிக்கு குறைவாக எடுக்கும் பேது சராசரியைக் குறைத்துவிடும். ஐ.ஸீ.ஸி சம்பியன் முறையில் ஒரு டெஸ்ட் போட்டி வெற்றியில் பெறப்பட்ட புள்ளிகள் போட்டித் தொடரின் ஆரம்பத்தில் அணி பெற்ற விகிதத்திலும் பார்க்க அதிகமானதாகவே இருக்கும்.

இதுபோலவே தோல்வியடையும் அணி தனது விகிதத்திலும் பார்க்க குறைவான புள்ளிகளையே பெறும். அதனால் வெற்றி ஒரு அணியின் விகிதத்தினை துரிதப்படுத்த தோல்வியானது அதனை எதிர்வளமாக்குகின்றது.

இரு அணிகளுக்குமிடையில் சமனிலை ஆனது குறைந்த விகிதம் எடுத்த அணிக்கு சிறிதளவு அனுகூலத்தை வழங்கும் ஒரேயளவு விகிதம் பெற்ற இரு அணிகளுக்கிடையிலான சமனிலையானது இரு அணிகளின் விகிதத்தையும் மாறாமல் வைத்திருக்கும்.

## ஐ.ஸீ.ஸி யின் டெஸ்ட் சாதனைப் பட்டியல்

### அதிகூடிய (அணி) ஓட்டம்

952 - 6dec இலங்கை எதிர் இந்தியா (கொழும்பு - 1997)
903 - 7dec இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (ஓவல் -1938)
849 dec இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியா (கிங்ஸ்ரன் 1929/ 30)
790- 3dec மேற்கிந்தியா எதிர் பாகிஸ்தான் (கிங்ஸ்ரன் 1957/58)
758-8dec அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியா (கிங்ஸ்ரன் 1954/ 55)
751-5dec மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (சென் ஜோன்ஸ் 2003/ 04)
747 மேற்கிந்தியா எதிர் தென்னாபிரிக்கா (சென் ஜோன்ஸ் 2004/05)
35 -6dec அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே (பேர்த் -2003/04)
729 -6dec அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1930)
13 - 3dec இலங்கை எதிர் சிம்பாப்வே (புலவாயோ - 2004)
708 பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து (ஓவல் -1987)
705 - 7dec இந்தியா எதிர் அவுஸ்திரேலியா (சிட்னி - 2003/04)
701 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (ஓவல் 1934)
699 -5 பாகிஸ்தான் எதிர் இந்தியா (லாகூர் -1989/90)
695 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (ஓவல் - 1930)
692 - 8dec மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (ஓவல் - 1995)
687 - 8dec மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (ஓவல் - 1976)
682- 6dec தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 2003)
681 - 8dec மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (போர்ட் ஒவ் ஸ்பெயின் - 9953/54)
676 - 7 இந்தியா எதிர் இலங்கை (கான்பூர் - 1986/87)
675 - 5dec இந்தியா எதிர் பாகிஸ்தான் (முல்தான் - 2003/04)
674 அவுஸ்திரேலியா எதிர் இந்தியா (அடிலெயிட் - 1947/48)
674/6 பாகிஸ்தான் எதிர் இந்தியா (பெஸ்லாபார்ட் - 1984/85)
671 - 4 நியூசிலாந்து எதிர் இலங்கை (வெலிங்டன் -1990/91)
668 அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியா (பிறிச்ரவுண் - 1954/55)
660 - 5dec மேற்கிந்திய எதிர் நியூசிலாந்து (வெலிங்ரன் - 1994 /95)
659 -8dec அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (சிட்னி - 1946/47)
658-8dec இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (நொடிங்கம் - 1938)
658-9dec தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியா (டுர்பாண்ட் 2003/04)
657 -8dec பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியா (பிறிச்ரவுண் 1957/58)
657 -7dec இந்தியா எதிர் அவுஸ்திரேலியா (கொல்கத்தா - 2000/01)
656-8dec அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (மன்ஜ்செஸ்ரர் - 1964)
654-5 இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா (டர்பான் - 1938/39)
653-4dec இங்கிலாந்து எதிர் இந்தியா (லோர்ஸ்ட் - 1990)
653-4dec அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (சிட்னி - 1993)
652 - 8dec மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1973)
652 பாகிஸ்தான் எதிர் இந்தியா (பைசலா பார் - 1982/83)
652 - 7 இங்கிலாந்து எதிர் இந்தியா (சென்னை - 1984/85)
652-7dec அவுஸ்திரேலியா எதிர் தென்னாபிரிக்கா(ஜோனெர்ஸ் பாக் - 2001/02)
650 - 6dec அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியா (பிறிச்ரவுண் - 1964/65)

### அதிகுறைந்த (அணி) ஓட்டம்

26 நியூஸிலாந்து எதிர் இங்கிலாந்து (ஒக்லாண்ட் - 1954/55)
30 தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (போர்ட் எலிசபேர்த் - 1895/96)
30தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (பிர்பிங்கம் - 1924)
35 தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (கேப்ரவுண் - 1898/99)
36அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (பில்பிங்கம் - 1902)
36 தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்திரேலியா (மெல்பேர்ன் - 1931/32)
42 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (சிட்னி -1887/88)
42 நியூசிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (வெலிங்ரன் - 1945/46)
42 இந்தியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் -1974)
43 தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (கேப்ரவுண் - 1888/89)
44 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (ஓவல் -1896)
45 இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (சிட்னி - 1886/87)
45 தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்திரேலியா (மெல்பேர்ண் - 1931/32)
46 இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியா (போர்ட் ஒவ் ஸ்பெயின் - 1993/94)
47 தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து (கேப்ரவுண்- 1888/89)
47 நியூசிலாந்து எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1958)
47 மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (கிங்ஸ்ரன் - 2003/04)
51 மேற்கிந்தியா எதிர் அவுஸ்திரேலியா (போர்ட் ஒவ் ஸ்பெயின் - 1998/99)
52 இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (ஒவல் 1948)
53 இங்கிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (போர்ட்ஸ் -1888)
53 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1896)
53 மேற்கிந்தியா எதிர் பாகிஸ்தான் (பைலசா பார் - 1986/87)
53 பாகிஸ்தான் எதிர் அவுஸ்திரேலிய (சார்ஜா-2002/03)
54 நியூசிலாந்து எதிர் அவுஸ்திரேலிய (வெலிங்ரன் - 1945/46)
54 மேற்கிந்தியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 2000)
54 சிம்பாப்வே எதிர் தென்னாபிரிக்கா (கேப்ரவுண் - 2004/05)
58 தென்னபிரிக்கா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1912)
58அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (பிரிஸ்டன் - 1936/37)
58 இந்தியா எதிர் அவுஸ்திரேலியா (பிறிஸ்டன் - 1947/48)
58 இந்தியா எதிர் இங்கிலாந்து (மான்செஸ்டர்- 1952)
59 பாகிஸ்தான் எதிர் அவுஸ்திரேலியா (சார்யா - 2002/03)
59 சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து (பராரே - 2005/06)
60 அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து (லோர்ட்ஸ் - 1888)

## தற்போதைய நிலவரம் (22.09.2005 வரை)

### டெஸ்ட் தரவரிசைப் பட்டியல்

| அணி | போட்டிகள் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 39 | 4966 | 127 |
| இங்கிலாந்து | 38 | 4533 | 119 |
| இந்தியா | 30 | 3361 | 112 |
| தென்னாபிரிக்கா | 35 | 3517 | 100 |
| நியூஸிலாந்து | 26 | 2598 | 100 |
| இலங்கை | 27 | 2678 | 99 |
| பாகிஸ்தான் | 26 | 2474 | 95 |
| மேற்கிந்தியா | 32 | 2359 | 74 |
| சிம்பாப்வே | 21 | 563 | 27 |
| பங்களாதேஷ் | 28 | 146 | 05 |

### துடுப்பாட்ட வரிசை

| | |
|---|---|
| ஜக்கலிஸ் | தென்னாபிரிக்கா |
| பிரைன் லாரா | மேற்கிந்தியா |
| றிக்கி பொண்டிங் | அவுஸ்திரேலியா |
| ராகுல் டிராவிட் | இந்தியா |
| வீரேந்தர் சேவாக் | இந்தியா |
| மத்தியூ கெய்டன் | அவுஸ்திரேலியா |
| சிவ்நரேன் சந்தரபோல்ட் | மேற்கிந்தியா |
| மார்க்கஸ் டெஸ்கோதிக் | இங்கிலாந்து |
| இன்சமாம் – உல் – ஹக் | பாகிஸ்தான் |
| அன்றூ ஸ்றகிஸ் | இங்கிலாந்து |

### பந்துவீச்சு வரிசை

| | |
|---|---|
| கிலன்மெக்ராத் | அவுஸ்திரேலியா |
| ஷேன்வோர்ண் | அவுஸ்திரேலியா |
| முத்தையா முரளிதரன் | இலங்கை |
| அன்ரூ பிளின்ரொப் | இங்கிலாந்து |
| சேன் பொலக் | தென்னாபிரிக்கா |
| மகாஜா றிக்னி | தென்னாபிரிக்கா |
| சமந்தவாஸ் | இலங்கை |
| சொயிப் அக்தர் | பாகிஸ்தான் |
| மத்தியூ ரோகாட் | இங்கிலாந்து |
| இர்பான் பதான் | இந்தியா |

### சகலதுறை ஆட்டக்காரர்கள்

| | |
|---|---|
| அன்ரூ பிளின்ரோவ் | இங்கிலாந்து |
| ஜாக்கலிஸ் | தென்னாபிரிக்கா |
| ஷோன் பொலக் | தென்னாபிரிக்கா |
| சனத் ஜெயசூரியா | இலங்கை |
| டானியல் விக்றோரி | நியூசிலாந்து |

(அடுத்த வாரம் தொடரும்...)

# வாசிப்பை நேசிக்க கற்றுக் கொடுங்கள்

# வருத்தம் தெரிவிக்கும் ஆசிரியர்கள்


**வா**சிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான் என்று கூறிய ஆங்கில கட்டுரையாசிரியர் பேக்கன் முதல் புத்தகங்கள் இல்லாத அறையில் என்னை விட்டால் உடனே இறப்பேன் என்று கூறிய இந்தியக் கவிஞர் வைரமுத்து வரை கூறியன. வாசிப்பின் மகிமையையும் புத்தகங்களது பெருமையும் எல்லோருக்கும் வெள்ளிடை மலையாக விளங்குகின்றது.

நம் நாட்டில் இந்த ஒக்டோபர் மாதத்தை இதற்காகத்தானோ என்னமோ வாசிப்பு மாதமாக பிரகடனம் செய்திருக்கின்றார்கள் ஒக்டோபர் மாதம் வேறு முடியப்போகின்றது. ஆனால் யார் என்ன சொல்லி என்ன பிரயோசனம் வாசிக்கும் வழக்கம் நம் மாணவர்களுக்கு வேண்டாத ஒன்றாகவே மாறிவிட்டது என்பது ஆசிரியர் குழாத்தினரின் கருத்தாகும்.இதற்காக பல்வேறு காரணங்களை பட்டியல் இடுகிறார்கள் அவர்கள்.

வவுனியா சமனங்குள அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கணித ஆசிரிய



ரான நேசராஜா இப்பழக்கம் மாணவர்கள் மத்தியில் குறைந்ததற்கு குற்றம் சாட்டுவது தொலைக்காட்சி பொட்டிகளைத் தான் .ஆனாலும் தற்காலக்கணிப்பீடு சார்ந்த கல்வி முறையும் இதற்கு ஒரு காரணம். ஏனெனில் முன்பெல்லாம் பாடசாலை மாணவர்களுக்கு பள்ளி முடிந்ததும் நிறைய நேரம் மிச்சமாக இருக்கும் எனவே மேலதிக வாசிப்பில் அவர்களால் ஈடுபட முடிந்தது. ஆனால் இன்று கணிப்பீடு என்கின்ற பெயரில் மாணவர்களை கசக்கிப்பிழிகின்றனர். பாடசாலையில் படிப்பு மாலை நேரங்களில் கணிப்பீடு தொடர்பான பயிற்சிகள் என்று மாணவனை வேறு திசையில் சிந்திக்க விடாத படி நமது பாடத் திட்டம் அமைந்திருக்கின்றது. நூலகம் என்றொரு பாடம் முந்தைய நாட்களில் மாணவர் நேர அட்டவணையில் இருந்தது. எனவே விரும்பியோ விரும்பாமலோ குறிப்பிட்ட நேரத்தில் மாணவன் நூலகம் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இப்போது அதையும் நீக்கிவிட்டார்கள் என்று வருத்தம் தெரிவித்தார். ஆசிரியர் நேசராசாவின் இக்கருத்தையே முன்வைக்



கிறார் ஊர்காவற்றுறை செண்ட் அன்ரனி பாடசாலை தமிழ் ஆசிரியரான பத்மராஜா தற்கால மாணவர்களின் கல்வி முறை வெறும் போட்டிப் பரீட்சையாகவே மாறிவிட்டது. இது அவர்களை தேடி வாசிக்க வைப்பதற்குப் பதிலாக பாடத்தை கரண்டியால் எடுத்துவாயில் ஊட்டவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை உண்டாக்கி விட்டது. முன்னைய காலங்களில் சனசமூக நிலையங்களில் பலவித நூல்கள் இருக்கும் ஆனால் தற்போது அவற்றின் எண்ணிக்கை குறைந்து தினசரிப்பத்திரிகைகள் மட்டுமே இருக்கின்றன. இவற்றிற்கு நம் நாட்டின் இடப்பெயர்வையும் யுத்த நெருக்கடியையும் காரணங்களாகக் கொள்ளலாம். தற்போது அந்த நிலைமை ஓரளவிற்கு மாறிவிட்டாலும் இடையில் மீண்டும் வந்த தொல்லக்காட்சி மாணவர்கள் மனதில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து



விட வாசிப்பு பழக்கம் வழுக்கி கீழே விழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டு விட்டது என்று வருத்தம் தெரிவித்தார்.

ஆசிரியரின் அதே ஆதங்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முதல்வர் சரஸ்வதி ஜெயராஜாவிடமும் உண்டு இன்றைய மாணவர்கள் மத்தியில் பத்திரிகை மற்றும் பொது நூல்களைப் படிப்பது மிகையான ஒரு செயலாகவே கருதப்படுகின்றது. இதற்கு போர், இடம்பெயர்வுதான் காரணம் என்று சொல்ல முடியாது. அந்தக் கால கட்டங்களில் வாசிப்பு மட்டும்தான் பல மாணவர்களின் பொழுதுபோக்காக இருந்தது. இணையத் தளம் வந்ததால் வாசிப்பு பழக்கம் குறைந்துவிட்டது. என்றும் சொல்வதற்கில்லை வாசிப்பு என்பது புத்தகவடிவிலும் இருக்கலாம். இணையத் தளமாகவும் இருக்கலாம். உண்மையில் வாசிப்பு பழக்கம் குறைந்ததற்கு பெற்றோர்கள் பிள்ளைகளை வெறும் போட்டிக்கல்வியில் சித்தி பெற்றால் போதும் என்கின்ற நிலைமைக்கு கொண்டு வந்து



விட்டனர். ஆனாலும் இந்த இடத்தில் நன்றாகப்படிக்கும் ஒரு சில பிள்ளைகளே வாசிக்கும் பழக்கமும் நன்கு கைவரப்பெற்றிருப்பதை கண்கூடாகக் காண கூடியதாக உள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா வாசிப்பிற்கு முக்கிய எதிரியாக குற்றம் சாட்டுவது தொலைக்காட்சிப் பெட்டியைத் தான் அவர் கூறிய இன்னொரு கருத்தும் இங்கு நோக்கத்தக்கது இப்போது வரும் பல புத்தகங்கள் மாணவர்களின் கவனத்தை கவரும் வகையில் கவர்ச்சிகரமாக தயாரிக்கப்படுவதில்லை குறிப்பாக குழந்தைகள் மற்றும் சிறுவர்களை கவரும் விடயம் புத்தகங்களில் உள்ள விடயங்களைவிட அவற்றின் வடிவமைப்பு தான் ஆனால் இதுபோன்ற புத்தகவாசனையை தூண்டக்கூடிய அம்சங்கள் நம் நாட்டு புத்தகங்களுக்கு இல்லை என்று சொல்வது மிகையாகாது.

முன்னைய காலங்களில் சொற்பொழிவுகள் கலந்துரையாடல்கள் என்பன அடிக்கடி நடக்கும். அவற்றில் சொல்லப்படும் கதைகள் குறிப்பிட்ட கதை உள்ள புத்தகத்தை படிக்கும் எண்ணத்தை தூண்ட வல்லதாக இருந்தது. புறத்தாக்கங்களால் ரசனை குறைந்து போயிருக்கும் மாணவர்கள் மத்தியில் இது போன்ற அம்சங்கள் இல்லாமல் இருப்பது வாசிப்பிற்கு பெரும் தடையாக உள்ளது.

இந்த இடத்தில் பேராசிரியர் கூறிய ஒரு சம்பவம் வேடிக்கையாகவும் அதே நேரம் வேதனையாகவும் இருந்தது. "அண்மையில் நான் ஒரு பிரபல பாடசாலையில் உயர் தரமாணவர் ஒன்றிய ஒன்றுகூடலுக்காகப் போயிருந்தேன் அங்குள்ள மாணவர்களிடம் நீங்கள் பொழுது போக்காக என்ன புத்தகங்கள் படிப்பீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் உடனே ஒரு பிரபலமான பத்திரிகையின் பெயரைச் சொன்னார்கள். தினசரி பத்திரிகை படிப்பதை புத்தக வாசிப்புடன் ஒன்றாக்கிவிட்ட மாணவர்களில் அறியாமையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை" எனக் குறிப்பிட்டார்.

இங்கு பலருக்கும் தெரியாத ஒரு வீடயம் பலமாணவர்கள் அந்த தின சரிப் பத்திரிகையைக்கூட படிப்பதில்லை என்பது தான் இது. நம் ஆசிரியர்களுக்கு தெரி




யவந்தால் அவர்கள் தமிழைத்தான் நொந்து கொள்வார்களா இல்லை தாய் மண்ணைத் தான் நிந்திப்பார்களா?

பலரின் கண்டனத்துக்கு ஆளாகும் தொலைக்காட்சிப்பெட்டிகள் நம் மண்ணை மிதிக்க முன்னரே வெளிநாடுகளில் மதிப்பிற்குரிய சாதனமாக மாறிவிட்டனவே ஆனால் அங்குள்ள மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது என்



கின்ற அங்கலாய்ப்பு அவ்வளவாக இல்லையே அதற்குக்காரணம் என்னவாக இருக்கக்கூடும் என்கின்ற வினாவிற்கு பேராசிரியரின் பதில் விடை தருகின்றது. வெளிநாட்டு மக்களின் வாழ்க்கை முறை நம் நாட்டைப் போல் இல்லை. அங்கு குழந்தைகளுக்கென்று ஒன்று பெற்றோர்களுக்கென்று தனித்தனி தொலைக்காட்சிகள் இருக்கும். எனவே அவரவர் வயதிற் கேற்ற நிகழ்வுகளை தேவைக்கேற்றவாறு பயன்படுத்திக்கொள்கின்றார்கள் என்றார்.

இக் கருத்தின் தொடர்ச்சியான ஒரு கருத்தை முன் வைக்கிறார் யாழ். பல்கலைக்கழக பொருளியற் துறைத்தலைவரும், நியூஸிலாந்து மிஸ்ஸி பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளருமான பேராசிரியர் நித்தியானந்தன் நம் நாட்டில் "புத்தக வாசிப்பு " என்பதையே ஒரு நேரத்தை செலவிடும் வேலையாக மாணவர்கள் நினைக்கிறார்கள். அதற்கென்று தனியாக நேரம் ஒதுக்கி படிக்கவேண்டி இருப்பது மாணவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துகின்றது. வெளிநாடுகளில் மாணவர்கள் ரயில் பயணம் செல்லும் போதோ பேருந்துக்காக காத்திருக்கும் போதோ புத்தக வாசிப்பில் ஈடுபடுவதால் அவர்கள் வாசிப்புப் பழக்கம் இன்னும் குறைந்து போகாமல் இருக்கின்றது.

நம் சமூகத்தின் மத்தியில் விஞ்ஞானக் கல்விக்கு அளிக்கப்படும் முன்னுரிமை வாசிப்பு பழக்கத்தை வளர்க்கவில்லை. சமூக பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. இதுவும் வாசிப்பு பழக்கத்தை மாணவர்கள் மத்தியில் பின்னுக்குத்தள்ள ஏதுவாகின்றது. மேலும் தற்கால நவீன தொழில் நுட்பங்களான நகல் எடுக்கும் இயந்திரம் போன்றன புத்தகத்தை வாசித்து எடுக்கவேண்டிய பயணை நகல் எடுத்துவிட்டு சில சமயங்களில் அவற்றை படிக்காமலே விடக்கூடிய ஒரு சூழலை உண்டாக்கி விடுகின்றன எனக் குறிப்பிட்டார்.

பேராசிரியரின் கருத்தைத்தான் யாழ் பொது நூலகரான தனபாலசிங்கமும் கூறுகின்றார்.முன்பெல்லாம் மாணவர்கள் நூலகத்திற்கு படிப்பதற்காக காலை வந்



தால் மாலையில் தான் திரும்பிப்போவார்கள் ஆனால் இப்போது வருகின்றவர்கள் இணையத்தளத்தில் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு உடனே சென்றுவிடுகின்றார். மாணவர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் கல்வி முறை ரீயூசன்கள் போன்றன

கிருத்திகா தருமராஜா

தான் இவற்றுக்குக் காரணம். இந்த நிலை மாறி னாலே அன்றி மாணவர்கள் வாசிப்புத் திறனை வளர்ப்பதற்கு வழியில்லை என்றால்.

இவர்கள் சொன்ன கருத்தை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது தற்கால கல்விமுறையும் நவீன தொழில் நுட்பமும் தான் மாணவர்களின் வாசிப்பை நோக்கி நகரவிடாமல் இழுத்துப்பிடித்துக் கொண்டிருக்கின்றன என்பதை தெளிவாக்குகிறது.

செஸ்டன ∴பீல்ட் என்ற அறிஞர் சொல்வது போல மாணவர்களுக்கு மனித வாழ்க்கை என்னும் பயங்கரமான கடலில் சரியான திசையில் செல்ல உதவும் திசை காட்டும் கருவியாக செயற்படுபவை புத்தகங்கள் தான். எனவே, கசக்க வைக்கும் கல்வி முறையை அரசாங்க மும், ரீயூசனுக்கு பிள்ளைகளை அனுப்பு வதை உயர் தகுதியாகக் கருதும் பெற் றோர்களும் குழந்தைகளை தங்களுடன் அமர்த்திக்கொண்டு சீரியல் பார்க்கும் அம்மாக்களும் இனிமேலாவது திருந்துவார்களா? வாசிப்பை நேசிக்க குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பார்களா? இல்லை இதையும் காற்றில் விடுவார்களா?

□

விவாதத்தில் எல்லோருமே குறைகளை எடுத்துக் கூறலாம். கொள்கை பற்றி தீர்மானித்து விட்டால் குறை கூறுவதும் தவறுகளை கண்டு பிடிப்பதும் சுலபம். -ராஜாஜி

# வலம்புரி

## கண்காணிப்பு குழுவினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் நேற்று முன் தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

வாதரவத்தைப் பகுதியில் வல்லுறவு முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக நடவடிக்கைஎடுக்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகத்தைமேற்கொண்டனர்.

இதன்போது அந்த இளைஞனின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி 10க்கு மேற்பட்ட மக்களும் காயமடைய நேரிட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும்போது பொதுமக்கள் மீது இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டமை மோசமான யுத்த நிறுத்த மீறலாகும். வல்லுறவு முயற்சியில் ஈடுபட முயன்ற படையினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுவது நியாயமானது.

பொதுமககளின் நியாய பூர்வமான கோரிக்கைக்கு அமைவாக உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதே இராணுவப் பொறுப்பதிகாரிகளின் கடமை.

இதனை விடுத்து வல்லுறவு முயற்சியில் படையினர் ஈடுபட்டாலும் அது பற்றி எதுவுமே கேட்க முடியாதென்பது போல் படையினர் நடந்து கொள்வது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்ற போது அவர்களின் கோரிக்கைகளை அறிந்து குற்றம் செய்த படையினரை தண்டிப்பது, சட்டத்தின் முன் நிறுத்துவது இவையே செய்யப்படவேண்டிய விடயம்.

இதனை விடுத்து ஆர்ப்பாட்டம் செய்யும் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்வது இனரீதியான பாகுபாட்டின் அடிப்படையில் நடக்கும் திட்டமிட்ட செயலென்றே கருதவேண்டியிருக்கும்.

பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது அவ்விடத்திற்கு கண்காணிப்புக்குழுவினரும் வந்துள்ளனர். கண்காணிப்புக்குழுவினர் களத்தில் நின்றவேளையில் பொதுமக்கள் மீதான துப்பாக்கிப்பிரயோகம் நடந்துள்ளதெனில் நிலைமை எவ்வாறென்பதை புரிந்துகொள்ள முடியும்.

பொதுமக்களின் வசிப்பிடங்களுக்கருகாமையில் முகாமிட்டுள்ள படையினர் பெண்கள் மீது வல்லுறவு முயற்சியில் ஈடுபட எத்தனிக்கும் கொடூரம் தொடர்ந்தும் இடம்பெறுமாக இருந்தால் பொதுமக்கள் படையினரின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்த எத்தனிப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

எனவே இது விடயத்தில் கண்காணிப்புக்குழுவினர் காத்திரமான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அந்த நடவடிக்கையில் ஒன்று பொதுமக்களின் வாழ்விடங்களுக்கு அருகாமையில் உள்ள படை முகாம்களை அகற்றிவிப்பதாகும்.

# வன்முறையற்ற நீதியான தேர்தலை நடத்த சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்

## ஐரோ. ஒன்றிய தேர்தல் க.கா. குழு பகிரங்க வேண்டுகோள்



(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலினை கண்காணிக்கவென இலங்கை வந்துள்ள ஐரோபபிய ஒன்றியத்தின் தேர்தல் கணகாணிப்புக்குழு இம்முறை தேர்தலை வன்முறை ஏதும் அற்ற நீதியான, நேர்மையான முறையில் நடாத்துவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டுமென பகிரங்க வேண்டுகேள் ஒன்றை விடுத்துள்ளது.

சுமார் 66 கண்காணிப்பாளர்களைக்கொண்ட இவ் ஐரோப்பிய ஒன்றித்தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஷீனகன் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், கடந்த காலங்களில் தேர்தல் நடைமுறைகளை ஜனநாயகரீதியில் வலுப்படுத்துவதற்காக எம்மால விடுக்கப்பட்ட விதந்துரைகளை இலங்கை அரசாங்கம் இன்னமும் செயற்படுத்தவில்லை. இது குறித்து நாம் கடும் அதிருப்தியடைந்துள்ளோம்.

முன்னைய இரண்டு தேர்தல்களின் போது எம்மால் முன்வைக்கப்பட்ட விதந்துரைகள் அரசாங்கத் தரப்பால் அமுல்படுத்தப்படாதது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளது.

ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்த எம்மால் முன்வைக்கப்பட்ட எந்த விதந்துரைகளும் நடை முறைபடுத்தப்படவில்லை மாறாக அவை எங்கேயோ தூசிபடிந்து காணப்படுகின்றன.

இம் முறைத் தேர்தலின் பின்பும் எம்மால் முன்வைக்கப்படும் விதந்துரைகள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லையாயின் இலங்கை எதிர்காலத்தில் தேர்தலை கண்காணிக்கக் கோரி எமக்கு விடுக்கும் அழைப்புக்களை நாம் உதாசனம் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படும்.

நான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைவராகவே இங்கு வந்துள்ளேன் விடுதலைப் புலிகளையோ அவர்களின் பிரதிநிதிகளையோ சநதிப்பது என்பது எமக்கு வழங்கப்பட்ட வரையறைக்கு அப்பாற்பட்டது எனவும் தெரிவித்தார். (ற-4)

# வலிமை வாய்ந்த அரசாங்கமொன்றை புலிகள் நடத்திக்கொண்டிருக்கின்றனர்

## பி.பி.ஸி செவ்வியில் தொல். திருமாவளவன்

(இலண்டன்)

சுனாமி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் நன்றாகவே கவனித்து வருகிறார்கள்.

எனவே பாதிக்கப்பட்ட மக்களை மட்டுமல்ல வடக்கு-கிழககில் வாழும் மக்களை பாதுகாக்கக்கூடிய வலிமை வாய்ந்த அரசாங்கத்தையே தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நடைமுறையில் அனைவரும் உணரவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

பா.பி.ஸி தமிழ் ஓசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அச்செவ்வியில் மேலும் குறிப்பிடுகையில்,சுனாமி அனாத்தத்தினால் பதிக்கப்பட்ட மக்களுக்கு விடுதலைப புலிகள் மீட்புப்பணிகள் உட்பட பல்வேறு உதவி களை வழங்கினர்.

இந்தோனேஷியா மற்றும்தமிழ் நாட்டில் கூட இவ்வளவு துரிதமாக மீட்புப்பணிகள் மேற்கொள்ளப் படவில்லை. எனினும் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக இப் பணியினை செய்து முடித்துள்ளனர் எனவும் தெரிவித்தார். (ற-4)

# பூமிக்கு அருகில் செவ்வாய் வருவதால் பஞ்ச பூதங்களால் அழிவு ஏற்படுமாம்!

## பிரபல ஜோதிடர்கள் எச்சரிக்கை

செவ்வாய் கிரகம் பூமிக்கு மிக அருகில் வருவதால் 4 மாதத்திற்கு பஞ்சபூதங்களால் அழிவுஏற்படும் என்று ஜோதிடர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பூமியில் இருந்து செவ்வாய்க்கிரகம் 35 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வரும் கிரகங்களில் 4வது சுற்றுப்பாதையில் செவ்வாய் சுழன்று வருகிறது. இந்தக் கிரகம் பூமியை விடச் சிறியதாகும்.

செவவாய்க்கிரகம் தன் சுற்றுப்பாதையில் வரும்போது எப்போதாவது பூமியை நெருங்குவது உண்டு கடைசியாக கடந்த 2003ஆம் ஆண்டு அது பூமி அருகில் வந்தது அதன பிறகு நேற்றைய தினம் பூமிக்கு அருகே 5 கோடியே 90 இலட்சம் கிலோ மீற்றர் தொலைவில் செவ்வாய் கிரகம் வந்தது. இன்றும் நாளையும் செவ்வாயக்கிரகத்தை தெளிவாகக் காணலாம் மேலும் இரண்டு மாதத்திற்கு இதைப் பார்க்கமுடியும்.

இதற்கிடையே செவ்வாய்க்கிரகம் பூமியை நெருங்கி வருவது பூமிக்கு நல்லதல்ல பெரும் அழிவுகள் ஏற்படுத்தும் என்று பிரபல இரு ஜோதிடர்கள் எச்சரித்துள்ளனர். பொதுவாக செவ்வாயக்கிரகத்தை மேலைநாடுகளில் றோமன் யுத்த கடவுள் என்று செல்வதுண்டு.


இது அழிவு தரும் கிரகம் என்று ஜோதிடர்கள் சொல்கிறார்கள் வழக்கமாக செவ்வாய் பூமியை நெருங்கும் போது 45 நாட்களுக்கு அருகில் வந்துவிட்டு பிறகு விலகிச் சென்றுவிடும்.

இநதத் தடவை 6 மாதத்திற்கு பூமிக்கு மிக அருகில செவ்வாய்கிரகம் சஞ்சரிப்பதால் இதனால் பெரும் அழிவு ஏற்படும் என்று ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அசோக்குமார் ஜோஷி என்ற ஜோதிடர் கூறியிருப்பதாவது செவ்வாய்க்கிரகம் பூமியை நெருங்குவது நல்லதல்ல இரண்டு மாதத்துக்கு முன்பே அது பூமிக்கு அருகில் வந்துவிட்டது. இந்த கிரகத்தின் பார்வை காரணமாக மோசமான விளைவுகள் ஏற்படும் மனித குலத்திற்கு இது அழிவைத்தரும்.

செவ்வாய்கிரகத்தின் நெருக்கம் காரணமாகவே பு,கம்பம், புயல் போன்ற இயற்கைப்பேரழிவுகள் உண்டானது. பாகிஸ்தானில் 7.6 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டதற்கு செவ்வாய்க்கிரகம் தான் முக்கிய காரணமாகும்.கொல்லும் கிரகங்களின் சேர்க்கைகளும், எண்களும் இந்த நிலநடுக்கத்தை ஏற்படுத்திவிட்டன. செவ்வாய் பூமியை நெருங்குவதால் அழிவுவரும் மக்கள் உசாராக இருக்கவேண்டும் பாகிஸ்தானில் ஏற் பட்டதை விட மிக அதிக சக்தி வாய்ந்த பூகம்பம் ஒன்று உலகில் வரப் போகிறது.

நாலு மாதத்திற்கு இந்தப் பேரழிவு நீடிக்கும் அமெரிக்காவில் கத்ரீனா, வில்மா,அல்பா ஆகிய புயல்கள்




தாக்கியமைக்கு செவ்வாய்கிரகத்தின் நேரடித்தொடர்பு உண்டு இது போன்ற இயற்கை சீற்றங்கள் உலகில் பல பகுதிகளில் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு ஜோதிடர் அசோக்குமார் ஜோஷி கூறினார்.

ஜோதிடர் நிரஜ் தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது செவ்வாய்க் கிரகம் தற்போது மேஷ ராசியில் இருக்கிறது. மொத்தம் உள்ள 6மாத சேர்க்கையில் இரண்டு மாதம் கழிந்து விட்டது. இன்னும் நான்கு மாதம் உள்ளது. இந்த நாலு மாதமும் இயற்கைச் சீற்றங்களும் ,பேரழிவுகளும் ஏற்படும் மக்கள் கவனமுடன் இருக்கவேண்டும் பூகம்பம்,புயல், தீ,காற்று, தண்ணீர் போன்றவைகளால் மக்களுக்கு ஆபத்து உண்டாகலாம் இவ்வாறு ஜோதிடர் நிரஜ் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜோதிடர்கள் கணித்ததன் படி நேற்று காலை பாகிஸ்தானில் 5.9 ரிக்டர் அளவுக்கு நில நடுக்கம் ஏற்பட்டதாகக் தெரியவருகிறது. (ற)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



நமது ஆன்மாவின் பெருமையில் நம்பிக்கையின்மையே நாத்திகம் என்று வேதாந்தம் கூறு கிறது சந்தேகம் இன்றி பலருக்கு இது பயங் கரக் கருத்துத்தான் இது அடைய முடியாத குறிக்கோள் என்று நம்பில் பலரும் நினைக்க லாம் ஆனால் இதை ஒவ்வொரு மனிதனாலும் அடைய முடியும் என்று வேதாந்தம் வலியுறுத்து கிறது.

சுவாமி விவேகானந்தர்

# ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு பிரதமர் மகிந்தவுக்குக் கிடையாது

## சமாதானப் பேரவைத் தலைவர் ஜெகான் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தாலும் சமாதான முயற்சியில் நான் ஈடுபடுவேனென, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அரச சார்பற்ற பிரதிநிதிகளிடமும், சமாதான விரும்பிகளிடமும் இரகசியமாகக் கூறிவருகின்றார்.

உண்மையில் இது ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு அவர் கடைப்பிடிக்கும் யுக்தியாகும்; இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினதும், ஜேர்மன் கொன்றாட் அடிநோர் நிறுவனத்தினதும் ஏற்பாட்டில் யாழ். ஊடகவியலாளர்களுக்காக நேற்று நடந்த வடக்குத் தெற்கு கலந்துரையாடல் மூலமாக இலங்கையின் ஜனநாயக நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல் என்ற பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஜனாதிபதித் தேர்தலும், சமாதானத்தில் அதன் தாக்கமும்' என்ற விடயப் பொருளில் கருத்துரை வழங்கிய ஜெகான் பெரேரா தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்சியின் தலைமையைப் பாதுகாத்துக் கொள்வதில் கண்ணும்கருத்துமாக இருக்கிறார்.

எனினும் ஜனாதிபதியின் எண்ணப்பாட்டையும், கொள்கைகளையும் உடைப்பதாக பிரதமர் மகிந்தவின் பேச்சுக்கள் அமைந்துள்ளன. இது சந்திரிகா குமாரதுங்கவுக்கு பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது.

சர்வதேச அரங்கில் தனது பெயரை உயர்த்திக்கொள்வதில் ஜனாதிபதி அக்கறையாக இருக்கின்றார். அதற்காகவே பிரதமர் மகிந்தவையும், ஜே.வி.பியினரையும் எதிர்க்கின்றார்.

பிரதமர் மகிந்தவுக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவும், சிறுபான்மையின மக்களின் வாக்குகளும் கிடைப்பது அரிதாகவே இருக்கின்றது. அவரும் பெரும்பான்மையின மக்களின் பெரும்பான்மையான வாக்குகளை பெறுவதிலேயே தீவிரமாகவுள்ளார்.

ஜனாதிபதியின் ஆதரவும் அவருக்கு இல்லையென்றே கூறவேண்டும். அதே வேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சமாதான ஒப்பந்தத்தை தான் ஏற்படுத்தியதால் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கின்றார்.

இதனால் அவரின் தேர்தல் பிரசாரத்தில் சமாதானம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது, நாட்டின் பொருளாதாரம் பற்றிப் பேசுவதையே தனது யுக்தியாகக் கொண்டுள்ளார்.

இதன் காரணமாகவே ரணில் விக்ரம சிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத்தைவிட பொருளாதாரம் பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது.

எதுவாயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சமாதானத்தில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளதால் சமாதானத்தினை ஏற்படுத்தக் கூடியவருக்கு வாக்களிப்பதே மக்களின் பணியாகவிருக்கும் என்றும் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகவியல் தலைவர் கலாநிதி மகிம்மெண்டிஷ், கலாநிதி வில்லி செனநாயக்க ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

கருத்தரங்கின் தொடர் இன்றும் நடைபெறவுள்ளது. (நு)

## சோசலிச சமத்துவக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

சோசலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ரி.சந்திரசேகரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் நவ. 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 11 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். சோசலிச சமத்துவக்கட்சியின் சாா்பில் அதன் பொதுச் செயலாளர் விஜேடயஸ் போட்டியிடுகின்றார். இன்று நடைபெறும் பிரசாரக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பினர் நந்தன விக்கிரமசிங்க சிறப்புரையாற்றவுள்ளார்.

இதேவேளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இதுவென்பதுகுறிப்பிடத்தக்கது. (ச)

## பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நகரசபை செயலாளர் கு.ஆறுமுகம் தலைமையில் சாவகச்சேரி நகரசபை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை பொது நூலக பிரதம நூலகர் ச.தனபாலசிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-47)

## தெற்கு மக்களின்...

பாடுபடப்போகிறேன். யுத்தம் எனது வழிமுறை இல்லை. அதனை இனி மக்கள் அனுபவிக்கமாட்டார்கள். அதற்கு நான் உறுதி மொழி தருகின்றேன் மக்கள் சமாதான காற்றை சுவாசிக்க வேண்டும்.

அதற்காக நான் வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளேன் என பிரதமர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## காணாமல்போனோர் சங்க உறுப்பினர்கள் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் சந்திப்பு

(திருநெல்வேலி)

யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் சங்க உறுப்பினர்களுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருக்குமான சந்திப்பொன்று நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன், மா.க.ஈழவேந் தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோரின் நிலைபரம் தொடர்பாக இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்குவதற்காக குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இதேவேளை காணாமல்போனோரின் குடும்பத்தினருக்காக உதவிகளை தமிழா் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-43)

## அம்பாறையில் நவ.12 இல் தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. கடந்த யூலை மாதம் வவுனியாவில் வெளியிடப்பட்ட எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் மேற்படி எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தம்புலுவில் மகாவித்தியாலய விளையாட்டரங்கில் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி இந்த எழுச்சி நிகழ்வை உணர்வு பூர்வமாக நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்கான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ற)

## அக்கரைப்பற்றில்...

காணப்பட்டுள்ளார்.

தம்பட்டையில் திருமணம் புரிந்து தனது மனைவியுடனும் குழந்தையுடனும் வசித்து வந்த அவர் ஆழிப்பேரலையால் இருப்பிடங்களை இழந்து கண்ணகிபுரம் இடைத்தங்கலில் வசித்து வந்துள்ளார்.

நேற்று அவர் தங்கியிருந்த முகாமில் இருந்து வழமைபோல் அக்கரைப்பற்று - சாகாமம் வீதிவழியாக அரிசி ஆலைக்கு கடமைக்காக சென்று கொண்டிருந்த போது கோணாவில் என்னும் இடத்தில் வழிமறித்த நபர்கள் இவரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச்சென்றுள்ளனர். (ச-4)

## எரிபொருட்களின்...

ணெயின் விலையை லீற்றர் ரூ. 26.80 ஆக அதிகரிக்குமாறு எரிபொருள் விலை மறுசீரமைப்புக்குழு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

இக் குழுவின் பரிந்துரைக்கமைய தற்போது 80 ரூபாவாகவிருக்கும் பெற்றோல் 82 ரூபாவிற்கும், 50 ரூபாவாக உள்ள டீசல் லீற்றர் 59 ரூபாவாகவும், ரூ.30 .50 இருக்கும் மண்ணெண்ணெயை ரூ.57.50 ஆக அதிகரிக்கப்படவேண்டுமென கூட்டு ஸ்தாபனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச-4)

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M, மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
9900/=
டயலொக் வெளிச் செல்லும் அழைப்பு ரூ.4.60
கையடக்கத் தொலைபேசி விற்பனைக்குண்டு
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பக்கேஜ் இணைப்புக்களுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

தொடர்புகட்கு:
நியூ பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி
இல : 205/01 கஸ்தூரியார் வீதி
(ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்
T.P: 0712 - 399220, 0714 - 182500, 0773518330

மனோகரா யாழ்.
யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்


விஜய் + அசின்
கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

ராஜா சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு


அது ஒரு கனாக்காலம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.